[illegible]

[illegible]

Jan 1935

JL
00721, N22 SK
N35·8·6.
186947

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத் தினி தோங்குக.

762



OFFICE OF THE REGISTRAR
28 JAN 1935
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—தை § திங்கள் ௬.

| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | கூட்டுக்கமிட்டியின் குறுகிய நோக்கம் ... | 121 |
| உ. | தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாதல் ... | 125 |
| ௩. | இயற்கை வாழ்வே இன்பவாழ்வு ... | 133 |
| ச. | தொண்டின் பெருமை ... | 137 |
| ரு. | ஐயவினாவிற்கு விடை ... | 140 |
| சா. | ஆராய்ச்சி ... | 141 |
| எ. | கண்ணப்பர் புராணம் கருஉ-ம் செய்யுள் பொருளுரை | 144 |
| அ. | நத்தலீனில் டாக்டர் பாமோ ... | [illegible] |
| கூ. | கூட்டுக் கமிட்டி அறிக்கைக் கண்டனம் ... | 151 |
| க0. | தொண்ணூற்றுறூர் நகரத்தார் தீர்மானங்கள் ... | 152 |
| கக, | மதிப்புரை மஞ்சரி ... | 156 |
| கஉ. | பழமலைக்கோவை முகவுரை முதலியன | (13—16) |
| க௩. | தேவிகா லோத்தர ஆகமம் | (41—48) |

ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

## செய்தித் திரட்டு.

உள்ளூர்:— மார்கழி ஙஉ குமாரவிநாயகர் திருக்கோயிலிலும் நகரச் சிவாலயத்திலும் திருவாதிரை தெரிசனமும் நடராஜராஜர் திருப்பவனியும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

நகரச் சிவாலயத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் போஸ்டுமாஸ்டர் குடியிருந்து வருதற்கு நடப்புக் காரியக்காரர் கவனஞ்செலுத்தி வாடகைப் பத்திரம் எழுதிவாங்காதிருப்பது சரியல்ல இனியேனும் தாமதியாது எழுதிப்பதிக் துவாங்கினுல் நலமாகும்.

குன்றக்குடி:—ஆறுமாமுகத்தண்ணலார்க்கு மார்கழி உஎஉ தொடங்கி திருவிழாநடைபெறுகிறது. தை சுஉ தேர்த்திருவிழாவும் எஉ பூசநாள் தேனுற்றில் தீர்த்தவாரியும் பழநியாயூரணி மண்டபப்படியும் தெப்பத் திருவிழாவும் நடைபெறும்.

பரிமணங்குடி:—சண்முகநாதசுவாமி கோயிலில் தை கஉ முதல் ககஉ உத்திரநாள்வரை திருவிழா நடைபெறும் என ஷை தருமபரிபாலகர் பத்திரிகைமூலம் அழைக்கின்றார்.

சைவசமய பக்தஜனசபை:—சென்னை ஸ்ரீகந்தசாமிகோயிலில்மார்கழி 26உ முதல் ஆரம்பமாகும் பிரமோற்ஸவ காலத்தில் வழக்கம்போல இரவில் சுவாமிஎழுந்தருளுங்காலை பன்னிருதினங்கள் திருநெல்வேலிசைவத் திருவாளர் எஸ். சுந்தரமூர்த்திஓதுவாரவர்களால் தக்க இன்னிசைக்கருவிகளுடன் திருநெறித்தமிழ்வேதபாராயணமும் பதின்மூன்றாம்நாளாகிய இம்மதி 9உ செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை பெத்துநாயக்கன்பேட்டை தங்கசாலைவீதி 1/448 எண்ணுள்ள இச்சபாநிலயத்தில் ஷை ஓதுவாமூர்த்திகட்கும் அவருடைய துணையாளர்கட்கும் சன்மானஞ் செய்யுங்கால் தேவாரபடனமும் நடைபெறுமாகையால் அன்பர்கள் தினமும் வந்து சிரவணித்தின்புறுமாறு சபையார் வேண்டுகின்றனர்.

மெய்கண்டார் கழகம்:— காஞ்சிபுரத்தின்கண் உள்ள பலதலங்களையும் இக்கழகத்தினர் தலபுராண முறைப்படி பல அன்பர்களுடன் 10—10—1934 முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் தெரிசனம் செய்து வருகிறார்கள். அவ்வவ்விடங்களிலும் அவ்வப் புராணங்கள் பிரசங்கிக்கப் பெறுகின்றன. மேற்கண்ட முறையில் 30—12—34 ஞாயிற்றுக்கிழமை காலை எ இ-மணிக்கு ஸ்ரீகச்சபேசுரர் ஆலயத்தில் தரிசிக்கப்பெற்றது.

இக்கழக நிலயமாகிய காஞ்சீபுரம் ஆடிசன்பேட்டை ஸ்ரீ முத்தீசுரர் ஆலயத்தில் 10—12—34 முதல் பிரதி திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 3-மணி முதல் 6-மணிவரை தமிழ் நீதிநூல்களும் சைவசித்தாந்த சாத்திரங்களும் சிறுவர்கள் முதல் யாவருக்கும் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றன.

அன்பர்கள் யாவரும் வந்து கலந்துகொண்டு நலனுறுமாறு கழகத் தலைவர் திரு. அ. தாந்தோணி முதலியார் காஞ்சித்தல தரிசன தமிழ்ப்பாடல் பத்திரிகை வெளியிட்டுள்ளார்கள்.

வேந்தன்பட்டி:—இம்மாதக் கடைசியில் எழுபேர் கொண்ட கால் பந்து விளையாட்டுப் பரிசுப்போட்டி நடைபெறும்; அதில் கலந்து விளையாடும் செட்டியார்கள் நிகழ்ச்சி குறிப்பிடும் தேதியை எதிர்பாருங்கள் என நந்திவிலாஸ் புட்பால்கழகத்தினர் அறிவிக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JAN 1935
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு அ | பவ—தை: 1935—ஜனவரி | திங்கள் சு. |
|---|---|---|

உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## கூட்டுக் கமிட்டியின் குறுகிய நோக்கம்.

யாதாமொரு கமிட்டியும் எந்த விஷயங்களையும் தீரத்தெளிய விசாரித்து விசால நோக்கத்துடன் முடிவு கட்டுவதே முறையாகும்.

பர்மாப் பிரிவினை பற்றி எழுந்த கூட்டுக் கமிட்டியானது, அங்ஙனம் தீரத் தெளிய விசாரியாமல் குறுகிய நோக்குடன் காரியத்தை முடிவுகட்ட முற்பட்டது வியப்பே. அக் கூட்டுக்கமிட்டி வெளியிட்ட அறிக்கையால் யாருக்கு எவ்வித நலமுண்டென ஆராயின் இன்றென்பதேமுடிவாகும். மணச்சோற்றில் கல்லாய்ந்தாலென முற்றிலும் ஆராய்வதிலும் ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் பார்ப்பது போல ஒன்றிரண்டு ஆய்தல் கொண்டே அதன் பக்குவத்தை யுணரலாம்.

அவ்வறிக்கை பர்மாப் பிரிவினையை அடிப்படையாகக்கொண்டது. இந்தியாவுடன் இணைந்துள்ள பர்மாவை வேறு படுத்துவதனால் இந்தியர் களுக்காவது பர்மியர் களுக்காவது ஏதேனும் நன்மையுண்டா? இல்லையே. பிரிட்டிஷாருக்குத்தான் வையாகிய வருமான முண்டென்றாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய [illegible] குள்ளான

இருதேசங்களுக்கிடையே தீர்வை விதிப்பதால் வியாபாரத் தடையும் இருதேசத் தினத்திற்கும் துன்பமும் இழவுந்தானே நேரும். குடிகளை வாழ்வித்து அரசாங்கம் வருமானம் பெறுதல் சிறப்பேயன்றிக் குடிகளைப் படுகுழியில் ஆழ்வித்து அரசாங்கம் ஊதியம் பெறுதல் சிறப்பன்று. இறைநலம் குடிநலம் இரண்டையும் சீர்தூக்காதது குறுகிய நோக்கமே.

பிரிவினையால் விளையும் தீமை ஒருபுறமிருக்க பாரம் பரியமாய் நேசப்பான்மை யுடனிருந்து வந்த பர்மியர்களுக்கும் இந்தியர்களுக்கும் குரோதத்தையும் விரோதத்தையும் உண்டுபடுத்தி வேடிக்கைப்பார்க்கப்பிரியப்படுவதாயு மிருக்கிறது. காரணம்! பர்மாவைப் பிரிப்பதில் பர்மியர்களுக்கு நன்மை புரிவதுபோல பாவனை காட்டி பர்மியர்களை வசப்படுத்திக் கொள்ளலா மென்னும் குறுகிய நோக்கமின்றி வேறல்ல.

அவ்வறிக்கை இந்தியர்கள் பர்மாவுக்குக் குடியேறுவதிலும் இடையூறு புரிவதாயிருக்கிறது. இந்தியர்கள் பர்மாவிலுள்ள நலன்களை யபகரித்துக்கொண்டு போவதுபோலவும் ஐரோப்பியர் தாம் பாது காப்பது போலவும் பிதற்றுவதாயிருக்கிறது. பர்மாவின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்தவர்கள் இந்தியர்களா? ஐரோப்பியர்களா? என நன்கு விசாரித்துத் தெளிந்து கொள்ளாமல் இந்தியர்கள குடியேறுவதிற் குறை கூறித் தடுக்கப்பார்ப்பது குறுகிய நோக்கமே.

பர்மாவில் நெல்விளை நிலங்கள் முப்பது வருடங்கட்கு முன் ஏக்கர் ஐம்பது லெட்ச மென்றும் இப்பால் புதிதாக எழுபது லெட்சம் சேர்ந்து ஒருகோடியே இருபது இலக்கம் நிலங்களாயின என்றும் தெரிகிறது. இவ்வளவு நிலங்களை விருத்தி செய்யவும் விளைவிக்கவும் உதவியாயிருந்த இந்தியர்களைத் தடுக்கவும் உதவாதவர்களாயிருந்த ஐரோப்பியர்களைத் தடையின்றி விடுக்கவும் கூட்டுக் கமிட்டியார் கொண்ட நோக்கம் அப்பப்பா மிகமிகக் கொண்டாடத் தக்கதே.

இந்தியர்கள் குறைந்த கூலிபெறுவது ஒரு பெருங் குற்றமாம். என் செய்வது பாவம்! பெரிய தொழிலிலிருந்து சிறியதொழில்வரை ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஏற்றத் தாழ்ச்சியான கூலியாகவே ஏற்பட்டுவிட்டன. பர்மாவில் இந்தியர்கள் ஊர்வீதி கூட்டுதல்முதல் உயர் நீதிபதிஸ்தானம் வரையிலிருந்து பார்மாவுக்கு உழைக்கவில்லையா? அவர்களின் உழைப்பில் ஏதேனும் தாழ்வுண்டா? இல்லையே! [illegible] றவராயிருப்பதாற் குறைவென்னை? குறைந்த கூலி பெ[illegible]வாரைக் [illegible] கூடின கூலி பெறுவோ



ராகிய ஐரோப்பியர்களை விடுப்பதனால் ஏற்படும் நிறைவென்னை? என்றெல்லாம் நன்றாக எண்ணிப்பார்த்தால் பர்மாவுக்கு இந்தியர் வரவு தடுக்க நேருமா? நேராது. இந்தியர்கள் வரவைப் பர்மியர்கள் வெறுக்கின்றார்களா? இல்லை. பர்மா பிரிவினையால் இந்தியாவுக்கு தேக்குமரம், அரிசி ஏற்றுமதிகள் குறையும் என்பதையும் அதனால் பர்மாவுக்கு வருவாய் குறையு மென்பதையும் பர்மியர்கள் நன்கு அறிந்தே யிருக்கிறார்கள். சுதேசிகளாகிய பர்மியர்களுக்கும் குடியேறியவர்களாகிய ஐரோப்பியர்களுக்கும் இந்தியக் கூலிகளைத் தவிர வேறு யார் தொண்டூழியம் புரிவார்கள்? இந்தியக் கூலிகள் வயல் வெட்டு, வரப்புக்கட்டு நாற்றுநடுகை, கதிருப்பு ஆகிய வயற்றொழில்களுக்கும் வீதிகூட்டுதல், மலக்கூடம் சுத்தப்படுத்துதல், வீடுகளுக்குத்தண்ணீர்கொண்டுவந்துசேர்த்தல், சிரைத்தல், வெழுத்தல், ஏற்றுமதி இறக்குமதிகளுக்குச் சுமை தூக்குதல் ஆதிய பல வேறு தொழில்களுக்கும்இந்தியக் கூலிகள்தானே உதவுகின்றார்கள். கூலிக்குப் பாவம் குறுக்கே என்று கூட்டுக்கமிட்டி இந்தியக் கூலிகளிடத்து வெறுப்புக் காட்டுவது எவ்வளவு குறுகிய நோக்கம்!

இனி அவ்வறிக்கை 473வது பிரிவில் லேவாதேவிக்காரர்களைத் தடுக்கும் அபிப்பிராயங் காட்டுகிறது, பொதுவாக இந்தியர்களையும் சிறப்பாக நாட்டுக்காட்டைச் செட்டியார்களையுமே குறிக்கின்றது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பர்மாவுக்குச் செய்துள்ள நன்மைகளைப் பற்றி பர்மாவில் ஆட்சிபுரிந்த கவர்னர்கள் எழுதி வைத்த அபிப்பிராயங்களை யெல்லாம் கூட்டுக் கமிட்டியார் கண்ணோட்ட மிடவில்லைப் போலும்; பர்மியப் பெரியார்களைக் கலந்தும் அறியவில்லைப்போலும். இம்பிரியல் பாங்கு, பெங்கால் பேங்கு என்னும் பெயருடன் நிலவியகாலத்தில் இதர வகுப்பினருக்குப் பணம் கொடுப்பதானாலும் செட்டியார்களின் பொறுப்பிலேதான்கொடுத்து வந்தது என்றால் செட்டியார்களின் செல்வாக்கும் நாணயமும் எவ்வளவு சிறப்புடைய தென்பதை விளக்க வேறு சான்று தேவையில்லை. செட்டியார்கள் பர்மியர்களின் பயிர்த் தொழிலுக்கும் வியாபாரத்திற்கும் பணங்கொடுத்து உதவித்திரும்பப் பெற்றார்கள். திரும்பப் பெறமுடியாத நிலைமையில் நிலங்களைக்கூடுதலான விலைக்கு ஒப்புக்கொண்டுவெள்ளாண்மைக்குஅமைத்துவாடகைவாங்கிசர்க்காருக்குத் தாழ்வின்றி வரியைச் செலுத்தி அரசாங்க ஊழியராய் உழைப்பதைத் தவிர நிலங்கள் கைவந்ததனால் யாதொரு பயனும் மகிழ்ச்சியும் அடைந்தார்களில்லையே கஷ்ட நஷ்டந்தானே அடைந்திருக்கிறார்கள். நெல்விலைக்குப் போட்டிவருமா? விலைகூடுமா? பர்மியர்களுக்கு நன்மையுண்டாகுமா? நிலங்களுக்கு விலைதந்து மீட்டுக் கொள்வார்களா? என்று எதிர்பார்த்த வண்ணமாக, தெய்வப் பிரார்த்தனை செய்தவண்ணமாக யிருக்கிற செட்டியார்

186947

களைப் பழுதுநினைப்பதும் கூட்டுக்கமிட்டியின் குறுகிய நோக்கமே. இந்தியர்களை, இந்தியலேவாதேவிகக் காரர்களை, இந்தியக்கூலிகளைப் பர்மாவில் நுழையாமல் தடுப்பதால் பர்மாவுக்கு நன்மையில்லை என்பதையும், சினிமா சூதாட்டம் ஆதிய தீமைகளைத்தடுக்கலாம்; பர்மியர், இந்தியருக்குப் பயனற்றதாகிய விலையுயர்ந்த சீர்மைச்சாராயம்; செருப்பு; வைரக்கல்கள்; இயந்திர வண்டிகளாகிய வைகளையும், எதுவும் கொடாமல் இறந்தபின்கொடுப்பதாய்க்கூகப்பொருளையுறிஞ்சுவதாகிய லைப் இன்சூரன்ஸ் இவைபோன்ற பலவேறு தீமைகளையும் தடுக்கலாம் என்பதையும் சீர்தூக்கிப் பாராமல் இந்தியர்களுக்கு வெறுப்புக்காட்டி ஐரோப்பியர்களுக்குப் பட்சம் காட்டிய கூட்டுக்கமிட்டி பொதுநோக்குடையதன்று; விசாலநொக்குடையதன்று; குறுகியநோக்குடையதென்பதே முடிவாகும்.

அதுபற்றி ஆங்காங்கு இந்தியாவிலும், பர்மாவிலும் பலபாகங்களிலிருந்து கண்டனங்கள் செய்யப் பெறுகின்றன. செட்டிமார் நாட்டில் பலவூர்களிலிருந்து கண்டனத் தீர்மானங்கள் செய்யப்பெற்று இந்தியாமந்திரி இராஜப்பிரதிநிதி யாதியோர்க்குத் தந்தி முதலியன அனுப்பப்பெற்றுள்ளன. பர்மாவிலிருந்துவருகிற நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ரெங்கோனில் கூட்டம் கூடித் தீர்மானங்கள் செய்து தங்கள் சங்கத்தின் மூலம் தகுந்த நடவடிக்கைகளைச் செய்து வருகின்றார்கள். குறுகிய நோக்கத்துடன் எழுந்த கூட்டுக்கமிட்டி அறிக்கையின் கொடுமையைத்தடுக்க, கோயிலூரில் தொண்ணூற்றாறு நகரத்தார்கள் மார்கழி கஉ ஒருபொதுக் கூட்டமும் கூடினார்கள். அனேகம் ஊர்களிலிருந்து முன்னூறு பிரதிநிதிகளுக்குமேல்வந்திருந்தார்கள். தேவகோட்டை ஜமீன்தார் வெள்ளையன் செட்டியாரவர்களின் குமாரர் திருவாளர், சோமநாதன் செட்டியாரவர்கள் தலைமையில் ஒன்பது தீமானங்கள் நிறைவேறின. சிரமங்கள் நேராமல் தடுக்கவும், உரிமைகளைப் பாதுகாக்கவும் தொடர்ந்து வேலைசெய்ய வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, கனம் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்களைத் தலைமையாகக் கொண்ட ஒரு கமிட்டி நியமனமும் செய்யப் பெற்றது. கனம் ராஜா சர். அவர்களைப் பேட்டிகண்டு ராஜா சர். அவர்கள், இராஜப்பிரதிநிதி, இந்தியாமந்திரி முதலானவர்களைக்கண்டு பேசவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். தீர்மானங்களும்கமிட்டிமெம்பர்கள் பெயரும் பிறவும் இதன் மற்றொரு பகுதியில் காணலாம். கூட்டுக்கமிட்டியின் குறுகிய நோக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல், காருண்ய அரசாங்கத்தார் விசாலநோக்கத்துடன் பழமைக்குப்பழுதுவராமல்பாதுகாத்துத் தருவதேபோதுமானதென்று தெய்வப்பிரார்த்தனை செய்து ஜெயம் பெறுவோமாக!

உ

# தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாதல்.

(பொன்னேரி பிர்ம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.)

நாஸ்திகர் கூறும் ஆக்ஷேபமும் அதற்கு ஆஸ்திகர்கூறும் சமாதானமுமாக இச்சிறுவியாசம் நிகழ்கிறது.

## கடவுள் வரலாறு.

ஆக்ஷேபம்:—கடவுள் என்ற சொல்லை மனிதனே கற்பித்துக் கொண்டான். அதற்கொருபொருளிருந்து அப்பொருளே தானிருப்பதாக அவனுக்குத் தெரிவிக்கவில்லை.

சமாதானம்:—காண்டல் கருதல் உரையென்பன பொருளறிவுறுக்கும் வாயில்கள். கடவுள்காண்டற்கும் கருதற்கும் வசமாயின் திண்ணமாயழியும். எனெனில் அவ்விருவாயில்களும் அழியாத பொருள்களை நாளிதுவரை அறிவுறுத்தினபாடில்லை; அவை அறிவுறுக்கும்பொருள்களெல்லாம் அழியுந்தன்மையனவாகவேயுள்ளன ஆகலானென்க. சிலர் 'பானை உளதாகவே குயவனும் உண்டு: அப்படியே இப்பிரபஞ்சம் உளதாகவே கடவுளும் உண்டு எனக்கருதலாம்' என்பர். ஒளியையே காணாத ஒருவன் இருளிலிருந்துகொண்டு இருளைவைத்து ஒளியை உண்டென அனுமானிக்க முடியுமா? முடியாது. அப்படியே கடவுள் ஒளிவடிவம், நித்யம், இன்னும் பலபூர்ண லக்ஷணமுடையது. பிரபஞ்சம் இருள்வடிவம், அநித்யம், இன்னும் பல ஏகதேச லக்ஷணமுடையது. பூர்ணமும் ஏகதேசமும் தம்முள் விரோதிக்கும் ஆகவே, ஏகதேசியொருவன் ஏகதேசத்திலிருந்துகொண்டு ஏகதேசத்தை வைத்துப் பூர்ணத்தை அனுமானிக்க முடியவே முடியாது. முடியுமென்பது புகையை வைத்து அதனடியையில்லாத நீரை உண்டென யூகிக்க முடியுமென்பது போன்று வெறும்பேச்சாகும். காண்டலுங் கருதலும் மக்கட்சக்தி அதுஅங்ஙனம்கடவுளை விடயிப்பதற்குதவாமற்போகவே, கடவுள் தனது அதீத நிலையிலிருந்து கருணைமேலீட்டால் இறங்கி வந்து தன்னை மக்கட்குப் பிரஸ்தாபித்திருக்க வேண்டும்என்பதுசித்திக்கின்றது. அப்பிரஸ்தாபந்தான் வேதசிவாகமங்களென்னும் உரை; கடவுள் தன் உண்மையைத் தன் உரையிற் காட்டிற்று. மக்கள் அதனைத்தம் காண்டல் கருதல்களால் விடயித்தனர். ஸ்ரீமத் சிவஞானசுவாமிகளும் 'ஆகமவளவை சார்பாகத் தலைநின்று வழியளவையான் ஆராய்ந்து பொதுவியல்பு துணிதல்' என்றருளினார்கள். 'காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே' என்ற சுருதியுங் காண்க.

## கடவுட்பொருள்.

ஆ:—கடவுள் என்பது ஐந்துகண்ணன் மூன்றுதலையன் என்பன போலப் பொருளற்றசொல். ஐந்து கண்ணன் முதலியசொற்களைக் கேட்டுக் குழந்தைகள் நடுங்குவதுபோல் மக்கள் கடவுட்சொல்லைக் கேட்டு மதிக்கலாயினர்.

ச:—சடம், சித்து, சூனியம் எனப்பொருள் மூவகை. மின்சாரம் சடம். கடவுள் சித்து. முயற்கொம்பு சூனியம். மின்சாரம் சடக் கருவியாற்றான் அறியவரும். கடவுள் சித்துக்கருவியாற்றான் அறியவரும். முயற்கொம்பு எந்தக்கருவியாற்றான் அறியவரும்? ஒருவாற்றானும் பொருள் காணமுடியாத முயற்கொம்பே வெறுஞ்சொல். ஒருவாற்றாற் பொருள்காணநின்ற கடவுட்சொல்லும் வெறுஞ்சொல்லாதல் யாங்ஙனம்?

## கடவுளைக்காணவழி.

ஆ:—கடவுட்பொருள் நாளிதுவரைக் கண்ணுக்குங், கருத்துக்கும் விஞ்ஞானக் கருவிக்கும் அகப்பட்டிலது. அங்ஙனமாக அதனை உள்பொருளென எப்படிச் சொல்லலாம்?

ச:—மனிதனறிவு விளங்குதற்கு அந்தக் கரணங்கள், பாஹியக் கரணங்கள், இதரகரணங்கள் என்னும் இவைகள் உபகரிக்க வேண்டும். அந்தக்கரணங்கள் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன. பாஹியக்கரணங்கள் மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன. இதரகரணங்கள் தூரதிருஷ்டிக்கண்ணாடி அணுதிருஷ்டிக் கண்ணாடி முதலியன. எந்தக்கருவியின் துணையும் வேண்டாமல் பொருள்களை அறியும்வன்மை மனிதனறிவுக்கில்லை. அக்கருவிகள் கொண்டும் மனிதன் நாளிதுவரை கண்டுவருவனவெல்லாம் வெறும் அறிவற்ற பொருள்களே. உலகனைத்தும் சித்துஞ்சடமுமாய் இருவகையே படும். சித்து—அறிவு அல்லது அறிவுள்ளபொருள். சடம்—அறிவின்மை அல்லது அறிவில்லாதபொருள். கடவுளும் உயிரும் சித்துக்கள். மற்றவையடங்கலும் சடங்கள். எந்தவிஞ்ஞான சாத்திரிதான் விஞ்ஞானக் கருவிதுணையாகச் சித்தைக் கண்டுபிடித்தான்? அறிவை அறிவாகவே காட்டவல்ல விஞ்ஞானக் கருவியும் உளதோ? அந்தக் கரணங்கள் சடம். பாஹியக்கரணங்கள் சடம். விஞ்ஞானமுதலிய இதரகரணங்கள் சடம். அம்மூவகைக் கரணங்களால் அறிவுறுக்கப்படும் பொருள்கள் சடம். சித்துப்பொருள்கள் அம்மூவகைக் கரணங்களாலும் அறியவாரா. சடப்பொருள்கள் சடக்கரணங்களால் அறியவருவனபோல்சித்துப்பொருள்கள் சித்துக் கரணங்களாலேயே அறியவரும். அக்கரணங்கள் தாம் அவனருளே கண்ணாகக்காண்டல் முதலியன. ஆகையால் மனிதன் தன்னறிவில் தான் விஞ்ஞானியாகிப் பாஹியாந்தக் கரணங்களுக்கு நேரிலகப்படாத நுண்ணிய



சடவுலகை விஞ்ஞானக் கருவிகளினுதவியால் அகப்படுத்திக் காண்டல்போல்ஞானியுமாகி ஞானப்பொருள்களைஞானக்கருவிகள் மூலம் அகப்படுத்திக் காணவேண்டும்.

## கடவுளைக் கண்டவர்.

ஆ:—கடவுளைக் கண்டவர் இன்றுவரை எவருமில்லை. அவர் கண்டார்இவர்கண்டார் என்றெழுதப்பட்டிருக்குங்கதைகளெல்லாம் சுத்தப்பொய்.

ச:—கடவுள் சூனியமன்று; உள்பொருள். சூனியமே புலனாகாது. உள்பொருள் புலனாகவே செய்யும். ஆனால் கடவுட்பொருள் உள்பொருளாயிருப்பதுடன் நுண்பொருளாயுமிருக்கிறது. ஆகலின் அதனைக் காணவிரும்பும் மனிதன் தன்னறிவை மிகவும் பிரகாசமுடையதாக்கிக் கொள்ளவேண்டும். அம் முறையைச் சிவஞான போதாதிசத் சாத்திரங்களிற் காண்க. திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் முதலாயினோர் அப்படி முழுதும் பிரகாசித்த அறிவாற் கடவுளைக் கண்டார்கள். அம் மகந்நியர்களாலேயே அச் செய்தி பலமுறை பகிரங்கப்படுத்தப் பட்டுமுள்ளது. 'தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனுந்—தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே—தேடிக் கண்டுகொண்டேன்' என்பனவாதிய அவர்களின் சத்தியவாக்குக்கள் அநேகம். இன்னும் அவர்களின் சரித்திரங்களை எழுதிய ஆசிரியன்மார்களும் அக்கடவுட்காட்சிகளை வெகுவிஸ்தாரம் பண்ணியுள்ளார்கள். அவ் வரலாறுகளில் கடவுளைக் கண்டவர்கள் பிறர்க்குக் காட்டியதும் வெட்டவெளி. கடவுளுண்டென்பதையே சம்மதியாத நாஸ்திகர் அச்சரித்திரங்களை யெப்படிச் சம்மதிப்பார்? மாட்டவே மாட்டார்தான். அம்மாட்டாமை ஆஸ்திகத்துக்குப் பலவீனமாகாது.

## கடவுளின் மறம்.

ஆ:—கடவுள் இரக்கமுள்ள பொருளென்பர் ஆஸ்திகர். அஃதுண்மையானால் அதனதிகாரத்திலுள்ள இடி மனிதன் தலையில் விழுந்து அவனைக் கொல்வானேன்! புயல் சுளித்தடித்து அவன் கண்ணில் மண்ணைப் போடுவானேன்? மழைபெய்யாமலும் அதிகமாய்ப்பெய்தும் அவன் விளைவைக்கெடுப்பானேன்? நோய் அவனைப் பீடித்துப் படுக்க வைப்பானேன்? ஆகையாற் கடவுளெனவொன்று உண்மையிலிருந்தால் அது கொடியதாதல் வேண்டும்.

ச:—கருணை அறமென்றும் மறமென்றும் இருவகை. தந்தை பிள்ளையைக் குணங்கண்டு ஊட்டியும் குற்றங்கண்டு ஒறுத்தும் வளர்க்கிறான். வளர்த்தல் கருணை. ஊட்டிவளர்த்தல் அறக்கருணை. ஒறுத்துவளர்த்தல்மறக்கருணை. அறக்கருணை தந்தைபார்வையாலும் பிள்ளைபார்வையாலும் தன்சொரூபத்தாலும் சமீபபலனாலும்

எளிதில் விளங்கும். மறக்கருணையோ தந்தைபார்வையாலும் தூரபலனாலுமே அரிதிற் கண்டுகொள்ளப்படும். அங்ஙனமின்றி அதனைப் பிள்ளைபார்வையாலும் அதன் சொரூபத்தாலும் சமீபபலனாலும் அறியலுறின் அதுமறக்கருணையாகப்படாது. மறமா (கொடுமையா) கவேபடும். அப்படியே கடவுள் பரமபிதா. எல்லாவுயிர்களும் அதன் மகார். கடவுள் எல்லாம் வல்லது; எல்லாம் அறிவது; பரங்கருணைத் தடங்கடல். உயிர்கள் அதுபோல் ஆதியந்தம் இல்லாதன: ஆனால், குறைபல வுடையன. ஆகையால் அவை குணத்தையுஞ் செய்யும், குற்றத்தையுஞ் செய்யும். கடவுள் அவைகளைக் குணங்கண்டு தனுகரண புவனபோக மென்னுஞ் சர்வ பிரஞ்சத்தையுங் கொடுத்து ஊட்டி வளர்ப்பதுபோல் குற்றங்கண்டு இடியை வீழ்த்தியும், புயலை அடிப்பித்தும், மழையைப் பெய்வித்துந் தவிர்வித்தும், பிணியை உறுவித்தும் ஒறுத்தும் வளர்க்கும். தனுகரணமுதலியவற்றை யீதல் அதன் அறக்கருணை. இடியை வீழ்த்தல் முதலியன அதன் மறக்கருணை. உபகரிப்பவன் ஒறுக்கவேமாட்டானென்பதில்லை. அவ்வொறுப்பும் உபகாரமேயாம். அபகரிப்பவன் ஊட்டவேமாட்டானென்பதுமில்லை. அவ்வூட்டலும்அபகாரமே. கசாப்புக்கடைக்காரன் ஆட்டை ஊட்டிவளர்ப்பதில்லையா? அறிவுகெட்ட பிணியன் மருத்துவனையும் யோக்கியங்கெட்ட கைதி நீதிபதியையுந் திட்டிமேலும்மேலும் நாசத்தையடைவதுபோல் நாஸ்திகர்பார்வை கெட்டுக் கடவுளின் மறக்கருணையை மறமெ (கொடுமையெ)ன மருண்டு அப்பொருளை யிகழ்ந்து மண்ணுகின்றனர். பரிதாபம்.

## கடவுளின் நீதி.

ஆ:—எருது தான் இவ்வுலகிற் சீவித்திருப்பதற்குமுன் இல்லாத பொருள். அது இவ்வுலகிற் சீவித்திருக்கும்போது புலிக்கு ஒரு தீங்குஞ் செய்வதில்லை. ஆனாற் புலி அதனைக் கொன்றுதின்னுமாறு சிருட்டிக்கப்பட்டிருக்கிறது. அங்ஙனஞ் சிருட்டித்த கடவுள் நீதியுடையதாகுமா?

ச:—எருது தன் சீவியத்திற் புலிக்குக்குற்ற மொன்றுஞ் செய்வதில்லைத்தான். ஆனால் எருது புலியிடம் படும் துன்பம் அவ்வெருதின் ஏதேனும் ஒரு குற்றத்தின் பலனாகவேயிருக்கவேண்டும். மனிதன் தண்டத்தலைவரிடம் படுந்துன்பத்துக்கு அவன் செய்த குற்றந்தானேகாரணம்? துன்பமெல்லாம் ஒரு நிகரனவேயாக, மனிதன் அனுபவிக்கும்போது அவன் செய்தகுற்றங் காரணமென்றும் எருது அனுபவிக்கும்போது எக்குற்றத்தையுஞ் செய்யாமலே யனுபவிக்கிறதென்றும் பேசுவது பித்தம். எருது தன் எருத்துப் பிறவியிற் குற்றஞ்செய்யவில்லையானால் அப்பிறவிக்குமுன்னும் அப்பிராணிக்குப் பிறவிகளிருந்தும்அவற்றிற் செய்திருக்கவேண்டுமெனயூகிப்பதே அறிவு.



இனிப் புலி பொல்லாத சிருட்டியாயின் நல்ல சிருட்டிஎது? மனிதனே சிருட்டிகளிற் சிறந்தது என்பர் அநேகமாய் எல்லாரும். ஒரு வகையில் அது பொருந்தாது. பாம்புபொல்லாது. மனிதன் நல்லவன். ஆனால் உலகமுழுவதிலும் ஒருநாளில் பாம்புகள்கடிக்கும் மனிதரையும் மனிதர் அடிக்கும் பாம்புகளையுங் கணக்கெடுத்தால் மனிதர் அடித்துக்கொல்லும் பாம்புகளே அதிகமாகும். ஆகலின் மதனிதனை நல்ல சிருட்டியென்று எப்படிச்சொல்லலாம்? அவனே பொல்லாத சிருட்டியாய் முடிதலின்எல்லாச்சிருட்டிகளும் பொல்லாதனவேயாதல்திண்ணம். அங்ஙனமாகப்புலிமுதலியசிலசிருட்டிகளை மாத்திரஞ் சுட்டிக் கடவுள் ஏன் அவற்றை அப்படிப் படைத்ததெனக்கடாவுதல் அறியாமையே. எருது காட்டிற் புகுந்தால் புலிமுதலியவற்றால் அடிபடும். புலி ஊரிற் புகுந்தால் எருது முதலியவற்றால் அடிபடவே செய்யும். வரம்புகடவாமலிருந்தால் எல்லாம் நல்ல சிருட்டிகள் தான்.

புலி முதலியனமாமிசபக்ஷணிகள். ஆனால்அவைகள்உயிர்களைக் கொன்றுதான் அருந்தவேண்டுமென்ற நியம முடையனவல்ல. இறந்துகிடக்கும் பிராணிகளையே அவைகள் தின்று வயிறு வளர்க்கும். ஆனால் அப் பிரேதங்கள் அடிக்கடி அகப்படா. ஆகையாற்றான் அம் மிருகங்கள் எதிர்ப்பட்ட ஏழைப்பிராணிகளைக் கொல்கின்றன. அவ்வளவே. சிங்கம் புதுப்பிரேதங்களைத் தின்றமைதலுமுண்டு.

## கடவுளின் சிருட்டி.

ஆ:—அணுக்கள் பல சேர்வதால் உலகம் உண்டாயிற்று. அது பக்குவமடைந்ததும் புழுக்களும், புட்களும், விலங்குகளும், மனிதரும் அவ் வணுக்களின் சேர்க்கையாலேயே உண்டாயின. அணுக்கள்தாமே அங்ஙனம் மனிதன்வரைப் பரிணமித்திருப்பது விஞ்ஞான சாத்திரப்படி உண்மையாயிருக்க, அனைத்தையுங் கடவுளென்னும் பொருள் சிருட்டித்ததென்பது தப்பு.

ச:—அணுக்கள் உலகமும் புழுவும் புள்ளும் விலங்கும் மனிதனும் ஆங்காலத்தில் இன்னின்ன குறிக்கோள்பற்றி இன்னின்னவாறு ஆகவேண்டுமென்ற விருப்பங்கொண்டு அப்படியெல்லாம் ஆகவில்லை. ஆகையால்மனிதன் இனிக்கழுதையும், நாயும், பன்றியும், இதுவரை உலகிலறியப்படாத புதுப்பொருளும் ஆகலாம். இன்னும் சர்வாணுக்களுங் குறிக்கோளின்றிக் கிடக்கையில் லேசமாகிய மனிதவணுக்களுக்கு மட்டும் குறிக்கோள் எப்படியிருக்கும்? சர்வத்தை அதிக்கிரமிக்க லேசத்துக்கு முடியாது. மேலும் நெருப்பணுத்திரளில் ஒன்றற்கேனும் நீர்த்தன்மை யிருக்குமா? இராது. ஆகலின் நாஸ்திகன் மனிதரையும் அறிவும் குறிக்கோளுமற்றவராக்குகின்றான். உண்மையில்இப் பிரபஞ்சம்ஒழுங்குடையது. என்றேனும் சூரியன் மேற்கிலுதியான். பனங்கொட்டை

தென்னைமரந் தராது. நீர் மேடுபார்த்துப் பாயாது. ஆகையால் அறிவுடையகடவுளால் ஒரு குறிக்கோள்பற்றி இப் பிரபஞ்சம் சிருட்டிக்கப்பட்டுள்ள தென்பதே தீர்மானம்.

## கடவுளும் அச்சமும்.

ஆ:—மனிதன் ஆதிகாலத்தில் மழை இடி புயல் பிணி முதலியவற்றைக் கண்டு பயந்து அவைகளுக்குக் கர்த்தாக்களுண்டெனக் கற்பித்தான். அக் கற்பனைக் கர்த்தாக்களே நாளடைவில் கடவுள்களாயின.

ச:—உலகில் ஆஸ்திகசமயங்கள் பலவிருக்கின்றன. அவற்றுள் ஒன்றாவதுகடவுள்நிச்சயத்துக்கு மனிதனின் பயத்தைக்காரணமாகக் கூறியதுண்டா? இல்லவேயில்லை. ஆஸ்திகம் கடவுள் நிச்சயத்தை எவ்வெப்பிரமாணங்களாற் செய்கின்றதோ அவ்வப் பிரமாணங்களை அப்படியே அனுவதித்து விகவரிப்பதே நாஸ்திகருக்கு நியாயமாகும். ஆஸ்திகம் கடவுள் நிச்சயம் பண்ணுமுறை சிவஞானபோதாதி திவ்யகிரந்தங்களிற் பிரசித்தம்.

## இயற்கை.

ஆ:—புழுவைத் தவளையும், தவளையைப் பாம்பும், பாம்பை மயிலும், மயிலைக் கோம்பியுங் கொல்கின்றன. இவ் விரோத சிருட்டிகள் இயற்கை

ச:—இயற்கை யென்பது எது? தானாக இயலுவதா? அறிவுள்ளதா? அறிவில்லதா? அறிவுடைய வினைமுதல் இயற்றாமல் தானாக இயலுவதே அஃதெனின், மக்களிடம் நிகழும் கொடுவினைகளும் புழுவைத்தவளைகொல்வதுபோல் அவ்வியற்கையேயாமெனப்பட்டு நீக்கவேண்டாதனவும் முடியாதனவுமாகும். அவ்வியற்கை அறிவுள்ளதாயின் அதுவே கடவுள், அவ்விரோத சிருட்டிகள் அக்கடவுளாற் செய்யப்படுஞ் செயற்கை யென்பட்டு அவ்விரோதங்கள் காரணகாரியசம்பந்த முடையவாய் முடிவில் நீக்கவேண்டுவதும் படுவதும் உண்டு. அவ்வியற்கை அறிவில்லதாயின் நாஸ்திகரும் அன்ன இயற்கைகளே. அவர் பலபாதகங்களைச் செய்து பிறர் விசாரிக்கின் பாம்பு தவளையைக் கொல்வதுபோல் அப்பாதகங்களுந் தமக்குஇயற்கையேயெனப் பிதற்றவுஞ் செய்வர்.

## எல்லாங் கடவுள் செயல்.

ஆ:—எல்லா மக்களுங் கடவுளியக்கியே யியங்குகின்றனர், அவர் செயல்களும் அங்ஙனமே யென்பர் ஆஸ்திகர். அங்ஙனமாயின் மக்களுக்கென எச்செயலுஞ் சுதந்தரமா யில்லையாகல் வேண்டும். வேண்டவே, 'எமக்கொரு செயலுமில்லை; எல்லாங்கடவுளிட்ட வழிதான்நடக்கும்' என்றுகூறி ஒரு முயற்சியுமின்றித் திரியுமாறு ஆஸ்திகம் மக்களைச் சோம்பராக்குகின்றது.



ச:—'நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகுமாந்தர்க், கினத்தியல்பதாகுமறிவு', 'Tell me your Society and I will tell you what you are' என்பனவாதிய மெய்யுரைகளால் மனிதன் எக்காரணங்கொண்டும் சுதந்திரனாயிருக்க முடியாதென்பதைத் தெற்றென வுணர்க. இன்னுமவன் காலின்றி நடக்கவுங் கண்ணின்றிக் காணவுமாட்டான். உறக்கத்தில் அவன்முகத்தில்உமிழ்ந்தால் அவனறிவு அதனைக்கண்டு கொள்ளாது. இப்படிப்பட்டவனைச் சுதந்திர புருஷனென்று எப்படிச் சொல்லலாம்? ஆகவே, எல்லாப்படியாலும் பரதந்திரப்பட்ட அவன் எச்செயலையுங் கடவுள் செய்வித்தே செய்கிறானென்று ஆஸ்திகம் சொல்வது தப்பாகாது. ஆஸ்திகம் மனிதன் செயல்களைப்பற்றி அம்மட்டோடு பேசி நிறுத்தி விட்டால்மட்டும் அவனை ஒருக்காற் சோம்பனாக்கலாம். ஆனால் அது அச்செயல்களின் பயன்களனைத்தையும் மனிதனே நுகரவுரியானென்றுஞ் சொல்லுகிறது. ஆகவே மனிதன் எப்படிச் சோம்பித்திரிவான்! நாஸ்திகருக்கு அதுதெரியாது. ஒருசெயலின்பலன் செய்விப்பவனுக்கன்றிச் செய்பவனுக்குச் செல்லுமோவெனிற் செல்லும். அஃது இவ்விதம் மனிதனறிவு சுதந்திரமுடையது என்பது நாஸ்திகம். ஒருசமயம் சாத்தன் அறியாமையா லியக்கப்பட்டுக் கொற்றனைப்புடைத்து விட்டான். அரசுவிசாரித்துத் தண்டனை வழங்கியது. அத்தண்டனை யாருக்கு? குற்றத்தைச்செய்த சாத்தனுக்கா? செய்வித்த அறியாமைக்கா? சாத்தனுக்கேயாம். அறியாமைக்கன்று. ஆகலினன்றே அவன்தன்னை அக்குற்றத்திலியக்கிய அறியாமையை யுணர்ந்து 'நான் அக்குற்றத்தை அறியாமை வசத்தனாய்ச் செய்தேன்' என்று பச்சாத்தாபப்படுங்கால் ஒரொரு சமயம் அவனுக்கு மன்னிப்புங் கிடைக்கிறது.

## கொடுமை.

ஆ:—பொய் கொலை களவு கள் காமம் முதலிய தீமைகளையெல்லாம் ஆஸ்திகரே செய்கின்றனர். உலகெங்குமுள்ள சிறையிலடைப்பட்டுக் கிடக்குங் கைதிகளில் அநேகமா யெல்லாரும் அவராயிருப்பதே அதற்குச் சான்று. நாஸ்திகரை அங்கு பார்ப்பது அருமையினும் அருமை. ஆகையால் ஆஸ்திகமே மக்களிடைக் காணப்படுந் தீவினைகளுக்கெல்லாங் காரணம்.

ச:—நாய், பன்றி, கழுதை, புலி, கரடி, சிங்கம் முதலியனசெய்யுங் கொடுமைகளுக்குக் கணக்கில்லை. அம்மிருகங்களெல்லாம் முழு நாஸ்திகங்கள். ஆகையால் எல்லாக் கொடுமைகளுக்கும் நாஸ்திகமே பரமாநுகூலம். ஆஸ்திகம் எண்ணிறந்த விதி நூல்களைவகுத்து அவற்றிற்கியையவொழுகுமாறு மக்களை வற்புறுத்தியவண்ணமாயிருக்கிறது. அவ்வொன்றே ஆஸ்திகம்கொடுமைகட்கநுகூலமன்றென்பதை நன்கு நாட்டும். ஆஸ்திகத்தைக் கொஞ்சமறிந்த நாஸ்திகங்கள், கொஞ்சமு மறியாதநாஸ்திகங்கள், என நாஸ்திகங்கள் இருவகை.

அவற்றுள் நாஸ்திகமக்கள் முதல்வகை. விலங்கு பறவை முதலியன இரண்டாம் வகை. முதல்வகையிற்காணப்படும் நல்வினைகளனைத்தும் அதற்குள்ள ஆஸ்திக வாசனைபற்றி அதிற்படிந்தன. ஆஸ்திகரிலும் நாஸ்திகத்தை அறியாதாரிலர். ஆகையால் அவர்பாற் காணப்படுங் கொடுவினைகளனைத்தும் அவருக்குள்ள நாஸ்திக வாசனைபற்றி அவரிடம்படிந்தன. இப்பிரபஞ்சத்தில்ஓரறிவுமுதல்ஆறறிவுவரைப்பல்லாயிரகோடி யுயிர்கள் உள்ளன. அவற்றுள் ஆஸ்திகப் பிறப்பெடுத்த வுயிர்கள் மிக மிகச் சில. பெரும்பான்மை நாஸ்திக வுயிர்கட்கிடையிற் சிறுபான்மை ஆஸ்திகவுயிர்கள் வாழ்வில் வெற்றி பெறல் எளிதன்று. ஆகவே, மக்களைக்கெடுப்பன ஆஸ்திக சாமானியரிடமிருப்பதனாலேயே ஆஸ்திகத்துக் குரியன வென்பதும், வாழவைப்பன நாஸ்திக விசேடரிடமிருப்பதனாலேயேநாஸ்திகத்துக்குரியன வென்பதும் மடமை. ஆஸ்திகமொன்றே மக்களைவிலங்கினின்றும் வேறுபடுத்தி உயர்த்தும். நாஸ்திகமோ மக்களை விலங்கோடிணைத்துத் தாழ்த்தவே செய்யும்.

### நடத்தை.

ஆ:—மிருகங்கள் கடவுளை யறியா. ஆயினும்அவைசுகமாகவாழ்கின்றன. அவை தம்சுகத்துக்கு எவ்வென்ன நடத்தைகளை அநுசரிக்கின்றனவோ அந்நடத்தைகளையே மக்களும் அநுசரிக்கலாம். எல்லாரும் விரும்புவது சுகம். அதற்கநுகூலமாவன வெல்லாம் நன்னடத்தைகள்; பிரதிகூலமாவன வெல்லாம் கெட்டநடத்தைகள். அவ்விருவித நடத்தைகளுக்குமுள்ள வித்தியாசம் அவ்வளவுதான்.

ச:—கொலை, களவு, நடுத்தெருவிற் பலரறிய முறையின்றிப் புணர்தல், கல்வி கேள்வியின்மை, அரசாங்கமின்மை, சின்னமீனைப் பெரியமீன் விழுங்குதல் (Might is night) முதலிய நடத்தைகள் விலங்கிடங் காணப்படுகின்றன. நாஸ்திகத்தில் மிருக முதலியன அநுபவிக்கும் சுகத்துக்கும் மனிதன் விரும்புஞ் சுகத்துக்கும் வித்தியாசமில்லை. ஆகையாற்றான் விலங்கு முதலியன ஆசரிக்கும் நடத்தைகளை மனிதனுந் தன் சுகத்தின் பொருட்டு ஆசரிக்கலாமென்று நாஸ்திகன் சொல்கிறான். ஆஸ்திகமோ தயவு, புலனடக்கம், பிதா மாதா சகோதரனாதிய வுறவு முதலிய மனித சுபாவங்களை விடாமல் மனிதன் சுகமடையவேண்டு மென்கிறது. ஆகையால் அவன் மிருகவாசாரத்தை யெப்படி ஆசரிக்கமுடியும்? நாஸ்திகர் மிருகங்களிடையும் மனித சுபாவ முண்டெனக் கொண்டு மனித சுபாவத்தை யவமதிக்கின்றனர். நாங்கூழ்ப்பூச்சி அகரம்எழுதிவிட்டதனாலேயே எழுதத்தெரிந்ததாய்விடா தென்பதை அவர் அறிக.

நாஸ்திகர் கூறும் பிறவற்றையும் இவ்வாறெல்லாம் விவகரித்துப் பார்க்கும் அறிஞர்க்குத் தெய்வ மென்பதோர் சித்தம் ஏன் உண்டாகாது? நிச்சயமாய் உண்டாகவே செய்யும்.

* இதன் 127-ம் பக்கத் தலைப்பில் 'கடவுளின்மறம்'. என்றிருப்பதை நீக்கி தெய்வம்என்பதோர் சித்தம் உண்டாதல். எனக்கொள்க.

உ

# இயற்கை வாழ்வே இன்ப வாழ்வு.

(தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை ஆசிரியர்,
திரு. அ. தம்பிரான்முதலியார் அவர்கள்)

இயற்கை யென்பது:— இறைவனால் இயற்றப்பட்ட உலகும் உலகப் பொருள்களும், உயிர்களும், அவைகட்குரிய ஒழுக்க நெறிகளும், இவ்வுலகிற்கு வெளிப்பட்ட, ஞாயிறு, திங்கள், முகில், விண்மீன்கள் முதலவுமாம். இயற்கைப் பொருள்களெல்லாம் கடவுட்டன்மை யுடையன. இத்தகை இயற்கைக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இயற்கை, எல்லாமாய் அல்லவுமாய், பார்க்குமிட மெங்கு மொரு நீக்கமற நிறைந்து யாவற்றையும் இயக்கும் பரம்பொருளின் இருப்பை யுணர்த்துவதாகும்.

"கடற்காட்சி வான்காட்சி கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி யவ்வுடல் ஒண்சூற்—படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓரிறைவ னுண்டென்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்."

இயற்கைப் பொருள்களைக் காண்டொறும் காண்டொறும் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியின் இருப்பும், உள்ளுவார் உள்ளத்தில் உவப்பிலாத்தேன் சொரியும் உயரிய செம்பொருளின் ஆற்றலும் நம்மனத் தெழுகின்றன. நறுமணம் கமழும் இயற்கைச்சோலையின் கண்ணே மந்த மாருதமாய் அந்தமாக வந்து உந்துவதும் மயிலாய் நின்றாடுவதும், குயிலாய் நின்று கூவுவதும், அஞ்சுகமாய் நின்று கொஞ்சுவதும், மலராய் நின்று மணங் கமழ்வதும் எங்கும் நிறைந்த இறைவனே என்னும் உண்மை புலனாகின்றது. அதனாலன்றோ கடவுளின் இருப்பை வலியுறுத்த வந்த நாயனார் "ஆதி பகவன் முதற்றே யுலகு" என உலகின் மேலேற்றிக் கூறினார். அன்றியும் மெய்யுணர்ந்த ஞானிகளும் இயற்கைப் பொருள்களைக் கடவுளாகவே மதித்து வழிபாடாற்றினர். இத்துணைச் சிறந்த இயற்கையைக் கைவிட்டு நாம் இதுபோது பாழ்ஞ் செயற்கையைக் கைக் கொண்டோம். இயற்கை யின்பத்தை இழந்தோம். செயற்கை நரகிற் சிக்கித் துன்புறுகின்றோம்.

இறையருளாற் றோன்றிய பொருள்கள் யாவும் இயற்கைப் பொருள்களாகும். இயற்கைப் பொருள்கள் அவ் வந்நாட்டுத் தட்ப வெட்ப நிலைக் கேற்பனவாய் அமைந்துள்ளன. இயற்கை யன்னை நாட்டிற் கேற்பனவாய் இன்பமே பயப்பனவாகிய மொழி பொருள்களை யுதவுகின்றாள். ஒரு நாட்டின் மொழி, பொருள், வழக்கவொழுக்கங்கள், உண்டி, உடை, இன்னன வேறொரு நாட்டிற்குப் பொருந்தாதன வாகலாம். அவ்வந் நாட்டிற்களிக்கப்பட்ட மொழி பொருள்களோடு உள்ளநிறைகொண்டு இயற்கையோடியைந்த இன்பவாழ்வு நடத்தலேஇறைநெறிநிற்பதாகும். அஃதேயுண்மையின்பம்பயக்கும்.

அங்ஙனமின்றி வேற்று நாட்டுமொழி பொருள்களை யெல்லாம் ஒருங்கே நுகர அவாவுதல் செயற்கைப்பாழ் நாகரீகத்திற்கும் வேறு பல துன்பங்கட்கும் வழியாகும்.

இயற்கைப் பொருள்கள் நெறியறிந்து பயன்படுத்தப்படின் இன்பமே பயப்பனவாயும் இன்றியமையாதனவாயும் இருக்கக் காணலாம். இயற்கையழகு பகர்தற்கரிது. பலகாவதங் காணப்படும் மலைகளில் மேகந் தவழ்ந்ததையும் அழகும்; மலைவீழருவிகள் பாலு மறலு மரித்துப் பளிங்கெனப் பாய்தலின் இன்னிசை கூடிய எழிலும், மரங்களடர்ந்த சோலைகள் வெயில் தகைந்து காரிருள் சூழலும், மலையருவிநீர் கூழாங்கற்களின் மேல் சிலுசிலு வென்று ஓடிவந்து அச்சோலையின் ஒரு பக்கத்திலுள்ள ஆழ்ந்த குட்டையில் நிரம்பித் துளும்ப அதன்கண் உள்ள செந்தாமரைமுகிழ்கள் அகன்ற இலைகளின் மேல் இதழ்களை விரித்து மிகச் சிவப்பாய் அலர்தலின் அழகும், குமிர்ந்து மலர்நாறும் மந்தமாருதமும், மதுவுண் வண்டுகள் முரலும் இன்னிசையும், மரப்பொந்துகளில் மணிப்புறாக்கள் மாந்திக் கூவும் இசையும், மரங்களிற் பன்னிற மலர்களும் காயும் கனியும் துதைந்து விளங்கும் கண்கவர் ஓவிய வனப்பும், ஒருங்கே பயக்கும் சிறப்பும், தமது இயற்கை வாழ்விற் களிக்கும் பறவைகளின் இன்குரலோசையும், பரந்த பைம்பொற்புனத்துச் செழித்தோங்கு பைங்கூழின் கண்கவர்கவினும், ஆறுகள் ஆரம் அகில் உருட்டிப் பொன்னும் மணியும் பூவு மாலையுங் கொழித் தொழுகும் செவ்வியும், இவையனைத்தும் பொறிகளுக்கின்பூட்டி யுள்ளங் கவர்ந்தோங்குவன வல்லவோ.

இத்தகைய இயற்கை எழில்களைப் பலகாலும் மாந்திய நம் முன்னோர் அதன் இனிமையை (தமிழை) நன்குணர்ந்து, அவ்வியற்கைப் பொருள்களையும், எழிலையும் இன்பத்தையுமே பேசியும் புகழ்ந்துமுள்ள நமதினிய மொழிக்கும் "இனிமை" யல்லது 'தமிழ்" என்றே பெயரிட்டனர் போலும். இயற்கையைத் தமது இன் தமிழ் மொழியிற் சொல்லோவியமாக எழுதுவதே அன்னார் பெருவிளையாட்டாகக் கொண்டனர். கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பரிபாடல், ஐங்குறுநூறு முதலியன அத்தகையச் சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங்கள் என்னலாம்.

இங்ஙனம் பலவிதத்திலும் சிறந்த இயற்கை, நமக்களித்த மொழி, பொருள், வழக்க ஒழுக்கங்கள் முதலியவற்றைக் கொண்டு இயற்கை வாழ்வு நடத்துவதே இன்பமும் நலமும் தருவதாகும். இயற்கை வாழ்வென்ற மட்டிற் சிலர் ஒழுங்குமுறையில்லாக் காட்டு வாழ்வு எனச் சொல்கின்றனர். இயற்கையிலளிக்கப்பட்ட உணவுப் பொருள்களையும் மற்றைப் பொருள்களையும் கைக்கொண்டு, இயற்கை யறங்களையும், இயற்கை ஒழுக்க நெறிகளையும் கைவிடாது



நடத்தப்பட்ட வாழ்வே தமிழ் வாழ்வு. அவர்கள் கண்டதும் கேட்டதும் கற்றதும் உண்டதும் உயிர்த்ததும் தமிழே. அத்தகை இயற்கைத் தமிழமிழ்தம் கொண்டநாடு இதுவென நினைத்த மட்டில் "செந்தமிழ் நாடெனும் போதினிலே யின்பத் தேன் வந்து பாயுது காதினிலே," எனப் பேரின்பம் விளையுமானால் அதனை யுண்மையில் நுகரின் எத்தகை யின்பமிருக்கும் என்பது சொல்லவும் வேண்டுமோ? இவ்வின்பத் தமிழ் நாட்டிற் பிறந்த நாம் இதுகாலை யத்தமிழின்பம் நுகருகிறோமா? இல்லையே! காரண மென்னை? உரிமையிழந்தோம். தமிழை மறந்தோம். இயற்கையை விட்டோம். மீண்டுமவ் வுரிமை யுணர்வு பெறுதற்குரிய நெறியொன்றே யுளது. தமிழ்த் தாயிடஞ் செல்லல்வேண்டும். தமிழ்த் தாயின் சேவையில் அவ்வுரிமை யுணர்வைப் பெறலாம். தமிழ் மக்களே! அச்சேவைக்கு எழுங்கள்! எழுங்கள்!! இத்தகை சேவைகள் நம்நாட்டில் தற்போது தான் சிற்சில இடங்களில் நடைபெற்று வருகின்றன. சென்னைக் கடலகத் தறிஞர். உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் பேருதவியால், சென்ற ஆண்டு தைத் திங்கள் முதல் நாள், சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் 'தமிழ்த் திருநாள்' கொண்டாடப் பெற்றது. இவ்யாண்டு இன்னும் சீரிய முறையில் கொண்டாட முயற்சிகள் பல செய்து வருகின்றனர். எனவே, தமிழ் நாடெங்கும் உள்ள தமிழறிஞர் பலர் ஆங்காங்குள்ள தமிழ்ச்சங்கங்களின் சார்பாக அந்நாளில் இத்தகை "தமிழ்த் திருநாள்" கொண்டாடித் தமிழன்னைக்கு வழிபாடாற்ற முன்வருவார்களாக!

இயற்கைவாழ்வு நடாத்திய நம்முன்னோர் உடல் வாழ்விற்கும் உயிர்வாழ்விற்கும் இயற்கை யோடியைந்த நன்னான்கு முறைகள் கோலி வாழ்ந்தனர். வேந்தர், பார்ப்பார், வணிகர், தொழிலாளர் என நால்வகையாகப் பிரித்து கடனாற்றி வந்தனர். இப்பிரிவு உடல் வாழ்வுபற்றியது. உலகியற் றொழிலளவிலே இப்பிரிவு கொண்டனரேயன்றி பிறப்பாற் பாகுபாடு கொண்டனரில்லை. மன்னுயிர்க்கெல்லாம் பிறப்பொக்கும் என்ற விழுமிய நோக்கம் அவர்மனத்துக்கண் நிலைபெற்றிருந்தது.

"பிறப்பொக்கு மெல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

உயிர்வாழ்விற்கும் அங்ஙனமே நான்கியற்கைத் துறைகளை நிறுவிக்கொண்டனர். அவை, மாணவர், இல்வாழ்வோன், அறவோன் (வானப்பிரஸ்தான்), துறவி என்பன.

இவ்விதஇயற்கைத் துறைகளையமைத்துக்கொண்டு, இயற்கைப் பொருள்களையே கைக்கொண்டு நம்முன்னோர் இயற்கை யின்பவாழ்விற்களித்தனர். அதுகாலை கலைகளும் பெருகின; அறம்பொருளின்பங்கள் யாண்டும் நிலவின; அரசியல் குடியியல் அழகோடியங்கின;

அன்பும் அருளும் ஆறாகஓடின; எங்கணும்இன்பவாழ்வு; எங்கணும் இயற்கையறம்; எங்கணும் சன்மார்க்கம்; அந்நாள் நமது பாரதத் தாய் முடியணிந்து, கலையணிந்து, செங்கோலோச்சி, அரியாசனத்து வீற்றிருந்தாள். நாட்பலசெல்ல, நம்மவர் இயற்கையை விட்டுச் செயற்கையில் வீழலாயினர். பிறப்பாற் சாதி தோன்றியது. பெண் கல்வியும் தொழிற்கல்வியும் மறுக்கப்பட்டன. இன்னும் இன்னன பிற இயற்கைக்குமாறுய முறைகள் தோன்றின. இன்பவாழ்வு வீழ்ந்தது. பாரதத்தாயின் நிலைகுலைந்தது. முடிவில் நாம் இப்போதுள்ள அடிமைக் குழியில் வீழ்ந்தோம்.

எனவே, அன்பர்களே! நாமனைவரும் இயற்கை வாழ்வை மேற்கொள்ள முயலல் வேண்டும். இயற்கை வாழ்வு ஒழுங்குமுறையில்லாக் காட்டுவாழ்வல்ல வென்பதை முன்னரே குறிப்பிட்டேன். தமிழ்க் கல்வியே நாமிழந்த இயற்கை வாழ்வை மீட்டுமீயவல்லது. இயற்கை யொலிகளையே எழுத்தாகவும் சொற்களாகவும் பெற்றொளிரும் நமது இயற்கைத் தமிழ்மொழியையே இயற்கை வாழ்வில் இன்புறவிரும்பும் எவரும் துணைக்கோடல் வேண்டும். தமிழ்நூல்களில் இயற்கை வாழ்வும், இயற்கை யறங்களும், இயற்கை வழிலும், இயற்கைவழக்க ஒழுக்கங்களும், இயற்கை யோடியைந்த நெறிகளுமே பல்லிடத்தும் விரிக்கப்படுகின்றன. ஆதலின் இயற்கையைப்பற்றிய உணர்விற்குத் தமிழ்நூல்களைக் கற்றல்இன்றியமையாதது. நம்மவர்கள் இயற்கைத் தமிழைமறந்து மேல்நாட்டுமொழிக் கல்வியையே பெருமையாகவுஞ் சிறந்ததாகவும்கருதிக்கற்கின்றனர். அதன் பயனுகச் செயற்கையிலேயே யவர்மனந் திரும்பலுற்று செயற்கை நாகரிகச் சேற்றில் தன்மையுமுணராது வீழ்ந்துழல்கின்றனர். அவர்வாழ்வும் துன்பவாழ்வேயாகும்.

தமிழர்களே!

நமதினியஇயற்கைத் தமிழ்மொழியைப் புறக்கணியாது நன்கு கற்று, நூலில்நுவன்ற நெறிவழி இயற்கைவாழ்வுநடாத்து முந்துங்கள்: பெண்ணுரிமையை நிலைநாட்ட எழுங்கள்; பிறப்பாற் சாதி கணித்தலை ஒழியுங்கள்; இயற்கைப் பொருள்களையும் இயற்கையறநெறிகளையும் நாடுங்கள். நீங்கள் தமிழர்கள் என்பதைஉங்கள் வார்த்தையாலும், எழுத்தாலும், செய்கையாலும் வெளிப்படுத்துவீர்களாக! நீங்கள் உண்மைத் தமிழர்களாக இருக்கப் பாடுபடுங்கள். எந்தக்கலையையும் தாய்மொழியில் கற்க ஆசைப்படுங்கள். இதற்காக நீங்கள் கிளர்ச்சி செய்வீர்களாக. 'தமிழ்த்திருநாள்' கொண்டாடித் தமிழன்னையை வழிபடுங்கள். இதுவே நீங்கள் தமிழன்னைக்குச் செய்யவேண்டிய அரியபெரிய வேலையாகும்.

வாழ்க தமிழ்மொழி! வாழ்க வையகம்!

---

உ

# தொண்டின் பெருமை.

(நாகபட்டினம் வித்வான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள்)

ஈசன் தன்பாலன்பு செலுத்தும் அடியவரை ஆட்கொண்டு அருளுகின்ருனென்பதோர் உண்மை. ஆட்கொள்ளும் திறத்தில் அவரவர் நிலையை அறிந்து, பலவழிகளில் சோதித்தறிந்து ஆட்கொள்ளுகின்ருனென்பதற்குத் திருத் தொண்டர் புராணமே போதிய சான்ருகும். ஈசன் அடியார்களை புத்திரமார்க்கம், சன்மார்க்கம், சகமார்க்கம், தாசமார்க்கம் என்ற நால்வகை மார்க்கங்களில் ஆட்கொள்ளுகின்ருனென்பது ஆன்ருேர்வாக்கு.

கழுமலத்திற் ருேன்றிய கவுணியர் குலதிலகமாம் திருஞான சம்பந்தப் பெருந்தகையார் புத்திரமார்க்கத்தால் ஆட்கொள்ளப்பட்டவர் குழவிப் பருவத்தில் குளக்கரைக்குத் தந்தையொடு சென்ற சம்பந்தர் வாய்விட்டழுதார். இறைவன் இதை உணர்ந்தான். ஆட்கொள்ள எண்ணினன். இவ்வாறு இறைவன் எண்ணியதற்குக் காரணம் "தவமும் தவமுடையார்க் காகும்" என்ற பொய்யாமொழிக்கிணங்க சிவம்பெருக்கும் சம்பந்தரின் தவப்பெருக்கேயாகும். எண்ணிய இறைவன் உண்ணுமுலையொடு அவட்போந்தான் அழும்பிள்ளைக்குப் பெற்றதாய் செய்யும் செயலுக் கேற்ப உமை பொன் வள்ளத்துப் பாலைச் சம்பந்தருக்கு ஊட்டினுள். குழந்தை அழுகை நீங்கி ஞானம் பெற்றுவிளங்கிற்று. இச் சரித நிகழ்ச்சியால் ஈசன் அடியவரைப் புத்திரமார்க்கத்தால் ஆட்கொள்ளும் திறம் விளங்குகிறது.

நெஞ்சையுருக்கும் இனிய பாடல்களைப் பாடி ஆலயத்தைக் கட்டுவித்து விடாது பூசனை புரிந்து, மனம் கசிந்து, கண்ணீருள் மூழ்கி சன்மார்க்கத்தால் ஈசன் அடியை அடைந்த அடியார் மாணிக்க வாசகராவார். இம்முறையில் இவர் இறைவனடியை அடைந்தனர் என்பதற்கு,

"எழுதரு மறைகள் தேரு இறைவனை எல்லிற் கங்குல்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேலேறத் துளும்பு கண்ணீருண் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமைசெய்வாம்"

என்ற செய்யுளே சான்று பகரும்.

ஆதலின் நம் மாணிக்க வாசகர் சரிதத்தால் ஈசன் அடியாரைச் சன்மார்க்கத்தால் ஆட்கொள்ளும் திறம் விளங்குகிறது.

கைலையில் அணுக்கத் தொண்டாற்றி வந்த ஆலால சுந்தரர் இப் பூவுலகில் ஈசன் கட்டளையால் சுந்தரராய் அவதரித்தார். அவ்வாறு தோன்றிய சுந்தரருக்கு ஈசன் தோழனைப் போலிருந்து கழுதும் கண்படுக்கும் நள்ளிரவில் பரவைபாற் றூது சென்றும் பொருள் வேண்டின காலத்து முட்டுப்பா டெய்தாமல் பொருளுதவி செய்தும் வந்தார். இவ்வாறு ஈசன் சுந்தரரைத் தன்தோழனாகக் கொண்டதை,

"அறிந்த செல்வம் உடையானும் அளகைப்
பதியான் தோழமை கொண்டு
உறழ்ந்த கல்வி யுடையானும் ஒருவன்
வேண்டும் என விருந்து
துறந்த முனிவர் தொழும் பரவைதுணைவா
நினைத் தோழமை கொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும்
நுதற்கட் பெருமானே".

என்ற சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கே வலியுறுத்துகின்றது. இந்நிகழ்ச்சியால் ஈசன் அடியாரைச் சகமார்க்கத்தால் ஆட்கொள்ளும் திறம் விளங்குகிறது.

இனி நான்காவதாகிய தாசமார்க்கத்தின் பெருமையை ஆராய்வாம். நால்வருள்ளும் நாவுக்கரையர் வேளாண்மரபைச்சார்ந்தவர். இளமையில் பரசமயம்புக்கு திலகவதியம்மையாரால்சைவசமயத்தின் பெருமையைஉணர்ந்து சைவசமயம் புக்கவர். ஈசனைவழிபடும் மார்க்கங்களில் தமிழ்மறைஓதுதலே தக்கதென்றுணர்ந்து தலங்கள் தோறும்சென்று தமிழ்மறையைஓதி நாவுக்கரையர் என்றநாமத்தையும் பெற்றவர். தமிழ்மறைஓதுவதிலும் தொண்டாற்றலே ஈசனுக்கு உகந்ததெனக்கருதி, உழவாரப்பணியைக் கைக்கொண்டவர்.

இத் தகையபெரியார் தனக்குக்கைவந்த தொண்டின் திறத்தைத்தான் பாடியபதிகங்களில் ஒவ்வோரிடங்களில் வலியுறுத்திப் பெருமைப்படுத்துகின்றார். அவ்வாறு பாடப்பட்டபாசுரங்கள் பொருளாழத்தாலும் இசைநயத்தாலும் படிப்போர் மனதைப்பரவசப்படுத்துகின்றன. பக்தியை ஊட்டுகின்றன. ஈசனுக்குத் தொண்டாற்றுவதில் நம்மை ஈடுபடுத்துகின்றன.

ஈசன் சிதாகாசத்தில் உலகுயிர்கள் உய்யும்வண்ணம் நடமாடுகின்றான். அவன் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன்என்று எழுதியும் காட்டமுடியாதநிலையில் இருக்கின்றான். இருந்து அவன் ஆடும் இடத்தைஅறிந்து அவனடியை



அடைய அந்தணர் வேள்விகளைச்செய்து வேள்வித்தீயில் பல்வேறு அவிசுகளைச் சொரிகின்றார்கள். தும்புரு நாரதர் முதலியோர் அவனடியை அடைய எண்ணி அவன் புகழைப் பாடுதலாகிய தொழிலை மட்டில் செய்கின்றார்கள். தேவர்களும், தேவர்க்கு அரசனும் அவனடியை அடைய அவனைப் பரவுகின்றார்கள். இவர்கள் செயல் இவ்வாறாகி ஒரு பயனையும் அளிக்காதிருத்தலைக் கண்டும் தாங்கள் அவர்களில் மேம்பட்டவர்களெனக் கருதித் திருமாலும் நான்முகனும் விரைந்து விரைந்து தேடுகின்றார்கள். ஆனால் பலனடைந்தார்களில்லை. இவ்வாறு தங்கள் தங்கள் எண்ணத்திற்குத் தோன்றியவாறு ஒவ்வொருவரும் செய்து நிற்க மலைமகளும் கங்கையாளும் ஈசன் திருமேனியைத் தீண்டும் பேறு ஒன்றையே பெற்று அமைகின்றார்கள்.

ஆனால் மேலே கூறப்பட்டவர்களின் செயல்கள் யாவற்றினும் மிக்குத் தோன்றுவதாகிய அடியேன் செய்யும் குற்றேவல் உன்னைக்கண்டு, தீண்டி, உன்னோடு இரண்டறக் கூடிவிட்டது என்று கூறிக் களிப்பெய்துகின்றார். அந்தணர் புரியும் அவியடுதலினும், தும்புரு நாரதாதியர் பாடலினும், அமரேசன் முதலியோரின் பரவலினும், திருமால் நான்முகன் இவர்கள்தேடுதலினும், மலைமகள் கங்கையாள் இவர்கள் தீண்டுதலினும் மேம்பட்டுத் தோன்றுவதாகிய தன் குற்றேவலே கூடித் திளைத்ததென்று கூறிப் பெருமிதம் எய்துகின்றார்.

ஈண்டு அவியடுவார், பாடுவார், பரவுவார், தேடுவார், தீண்டுவார் என்று அமைக்கப்பட்ட சொல்வரிசையில் "கூடுமே" என்ற சொல் பொருளாழம் வாய்ந்து தொண்டின் பெருமையைப் புலப்படுத்தித் திகழ்ந்து தோன்றுதல் பக்திச் சுவையை ஊட்டுகின்றது.

திருச்சிற்றம்பலம்.

"ஆடுவாய் நீ நட்டம் அளவிற் குன்றா
அவியடுவார் அருமறையோ ரறிந்தே னுன்னைப்
பாடுவார் தும்புருவும் நாரதாதி
பரவுவார் அமரர்களும் அமரர்கோனும்
தேடுவார் திருமாலும் நான் முகனும்
தீண்டுவாள் மலைமகளும் கங்கையாளும்
கூடுமே நாயடியேன் செய்குற் றேவல்
குறை யுண்டே திருவாரூர் குடிகொண் டீர்க்கே"

திருச்சிற்றம்பலம்.

# ஐயவினாவிற்கு விடை.

திருநெல்வேலி ஸ்ரீ ச. சோமாஸ்கந்தன் அவர்கட்கு:—
ஐயா!

மார்கழிமாசம் வெளிவந்த "சிவநேசன்" பத்திரிகையில் விஷ்ணு பூசித்துவந்த மூர்த்தியை தேவேந்திரனுக்கு இடையிற் கொடுத்த பாவத்தினால் ஒரு தண்டத்தையும் பெற்றிலர் இதற்கு நியாயம் என்னையோ என வினவியிருந்தீர்கள். இதற்கு நியாயம் என்னையோவென்றால்:—

உட்பூசை புறப்பூசை எனப்பூசையிருவகைப்படும். இவ்விரண்டினுள் உட்பூசையேபுறப்பூசைக்குறுதலையான்வேண்டப்படுமென்க. இங்ஙனமாக விஷ்ணு பாற்கடலிற் குண்டலி சத்தியாகிய பாம்பணையில் பள்ளிகொண்டு அறிதுயில் செய்யும் மஹாஞானியாதலால் தாம்வேறு சிவம் வேறு என்று கருதாது அதுவே தாமெனக் கொண்டு சிவோகம் பாவனை செய்யும் இயல்பினராதலால் அச்சோமாஸ்கந்தப் பெருமானுக்கு அந்தரங்க பூசை செய்தாரன்றி இவ்வாறு புறப்பூசை செய்தாரல்லரென்பதாம். ஆகவே அந்தரங்க பூசை மஹாஞானிகளா லன்றி ஏனையோராற் செய்தல் கூடாது. அந்தரங்க பூசை செய்வோர் புறப் பூசை செய்யாதுவிடினும் விடலாம். அவ்வாறு விடுவது ஒரு பொருளைக் கையில் வைத்துக் கொண்டு நித்திரை செய்வோன் அப்பொருளை நித்திரையாம்போது விடுதல் போல விடுதலன்றி நாம் மஹாஞானி நாம் அந்தரங்க பூசை செய்யும்போது புறப்பூசை செய்யவேண்டிய தென்னையென்று விடில் எரிவாய் நரகத்திற் காளாதற் கோரையமின்றாம். இங்ஙனமாதலின் விஷ்ணு அச்சோமாஸ்கந்த மூர்த்திகளைத் தமது மார்பில் வைத்து அந்தரங்க பூசைசெய்து பின் இந்திரற்குக் கொடுத்தும் அப்பூசையைத் தவறாது செய்து வருதலால் அவரை அப்பாவஞ் சார்ந்திலது. இந்திரனோ அவ்வாறு மஹாஞானியல்லனாதலால் அந்தரங்க பூசை செய்யாது புறப் பூசை செய்துகொண்டிருந்தும் பின் தனதான் மார்த்த மூர்த்தியாய அப்பெருமானை முசுகுந்தனிடம் கொடுத்தமையால் அப்பாவத்திற்காக பறையனாயினான். இதுவே நியாயமான சமாதான மென்பதை யறியக் கடவீராக.

ச. பொன்னுஸ்வாமி குருக்கள்,
சுதுமலை, யாழ்ப்பாணம்.



# ஆராய்ச்சி.

(சுந்தவனம் தேவஸ்தானம் தருமகர்த்தா,
திக்கம் திரு. சி. செல்லையா பிள்ளையவர்கள்.)

## தடுத்தாட்கொண்ட புராணம்.

"ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ளவளப் பருங்கரணங்கள் நான்குஞ்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்திருந்து சாத்துவிகமே யாக
விந்துவாழ் சடையானாடு மானந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்துமாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்"

இ—ள்:— சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம்பலத்தே திருவருட்டிருமேனி கொண்டுநின்று திருநிறுத்தஞ் செய்தருளும் நடராஜப் பெருமானை எம்பிரான் றோழராகுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தெரிசித்த பொழுது, பேரறிவாந் தன்மையினவாய காண்டல், கேட்டல், உண்டல், உயிர்த்தல், உறுதல்களானறியப்படும் ஐம்புலன்களையும் அப்பிரானாது கருணைத் திருவுருவிற் றிளைத்தமையான் முற்றறிவா மியல்பினவாகத் திருந்திய கண்களே கொண்டு நிற்ப; அஃதங்ஙனமாக அளத்தற்கரிதாய் அளவிறந்த அன்பாய்த் திகழ்ந்தனவாகிய மனம், சித்தம், அகங்காரம், புத்தி எனப்படும் அந்தக் கரணங்கள் நான்கும் அந்நிலையினின்றுந் திருந்திய அவசநிலையதாகிய அன்பேயாக, விரிந்த செயலினவாய்ச் சாத்துவிகவியல்பினவாய் நின்ற தாமதம், இராசதம், சாத்துவிகமாகிய முக்குணங்களும் அவ்வன்பின் செயலாய்த் திருந்திய சாத்துவிகமேயாக, ஞானசந்திரன் வாழுந் திருச்சடையினையுடைய நடராஜ வள்ளலார் நடித்தருளும் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல் எனப்படும் நாற்றொழிலின் பயனாய் வந்த அருளாகிய பேரின்ப வெள்ளத்தினமுழ்ந்தி ஒப்பிலா வின்புருவாய் விளங்கினார் என்பது.

கொள்ள, ஆக, ஆக, திளைத்து மலர்ந்தார் என முடிக்க. அருணிலையாகுந் துரியாவத்தையினின்று சுகப் பிரபை மாத்திரையே விளங்கப் பெற்றவராகிய எம்பிரான்றோழர் அதீத நிலையையடைந்து சிவத்துவ விளக்க மென்னும் பரமசுகந்தலைக்கூடி நின்றார் என்பதாம்.

பேர் ஐந்து அறிவுந் திருந்த கண்களே கொள்ள அளப்பருங்கரணங்கள் நான்குந்திருந்து சிந்தையேயாக, ஒருகுணம் மூன்றுந்திருந்து சாத்துவிகமேயாக, இந்துவாழ் சடையானாடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் எனக்கூட்டுக.

கண் முதலியன புத்தீந்திரியமாம். புத்தியானது அறிவு சீவித்தற்கும், சிந்தை அல்லது மனமானது அன்புசீவித்தற்கும், குணமானது செயல் சீவித்தற்குமிடமாம். அங்ஙனமாக, சுந்தரமூர்த்தி சுவாமிகளது

அறிவு இச்சை செயல்கள் மூன்றும் சச்சிதானந்த சொரூபியாகிய சிவத்தையே விடயிக்க அப்பிரானுாது தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுனடமை, வரம்பிலின்ப முடைமை எனப்படும் எண்குணங்களுந் தன்குணங்களா யடங்கி இன்புருவாய் விளங்கினர் என்பதாம்.

எம்பிரான் றோழராகும் எம்மையாளுடைய நம்பிகள் சிவயோக பரம்பரையினராகலின் அவாது ஞானேந்திரியங்கள் ஐந்தும் வியாபக வியல்பினவாய் விளங்கின என்பார் "ஐந்து பேர் அறிவும்" எனவும், அவ்வழிநிகழு மறிவானெய்தப்பெறும் இச்சையும் பந்தித்தல், சிந்தித்தல், அறிவானெழுதல், துணிதல் என அளவின்பாற்படாது அவிழ்ந்த அன்பாய் நிகழ்ந்த தென்பார் "அளப்பருங் கரணங்கள் நான்கும்" எனவும், தாமதம், இராசதம், சாத்துவிக மெனப்படும் முக்குணங்களும் சாத்துவிகநிலையினவாய என்பார். "குணம் ஒரு மூன்றும்" எனவும், அங்ஙனமருணிலையினின்று தொழிற்பட்டனவாகிய அறிவிச்சை செயல்கள் மூன்றும் சுகாதீத நிலையை யெய்தின வென்பார் "திருந்துகண்களேயாக," "திருந்துசிந்தையேயாக", "திருந்து சாத்துவிகமேயாக" எனவும், அப்பெற்றித்தாய சுகாதீதநிலை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நாற்றொழிலின் பாற்பட்டுப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து நாழிகை வட்டமும் கறங்கும் போலச் சுழன்றுழன்று அடிப்பட்டு அடிப்பட்டு ஆணவமலசத்தி அணுவணுவாய்த் தேய்ந்து தேய்ந்து சென்று பரிபாகமடைந்து இருவினை யொப்புஞ் சத்திநிபாதமு மெய்தியபின் அருளானெய்தப்படுவதாக, அதனை யருணிலையி னின்ற சிவயோகராதலின் நடராஜப்பெருமானது ஐந்தொழி னடாத்து மருட்டிருமேனியைத் தரிசித்தமாத்திரையா னடைந்தார் என்பார் "இந்துவாழ் சடையானாடு மானந்தவெல்லையில் தனிப் பெருங் கூத்தின் வந்த" எனவும், அந்நிலையே பரமசுகமென்பார் "பேரின்பம்" எனவும், அத்தன்மைத்தாய பேரின்பம் அளவிகந்த வியல்பின தென்பார் "வெள்ளம்" எனவும், அத்தகைய பேரின்ப வெள்ளத் தழுந்தி அதனையே விடயித்து நின்றார் என்பார் "திளைத்து" எனவும், அங்ஙனம் திளைத்ததனாலுப வின்பம் பிறிதொன்றனோடு முவமிக்கப்படாத பெருமையின தென்பார் "மாறிலா மகிழ்ச்சி" எனவும், அப்பரிசாய மாறிலா மகிழ்ச்சி யிடத்து அதனை யறிந்ததானுமின்றி அவ்வின்பமாய் நின்ற தலைவனுமின்றி இன்பேதாய் நின்றார் என்பார் "மலர்ந்தார்" எனவும் கூறினர்.

"மாறிலா மகிழ்ச்சி" என்பதற்கு துன்பாய் மாறாது இன்பேயாய் நிற்கும் மகிழ்ச்சி எனினுமாம் ஆன்மாக்கள் தநுகரணங்களோடு தோற்றுதலால் மலபரிபாகமும், மலபரிபாகத்தால் ஆனந்தமு மெய்துதலின் அத்தோற்றத்தைச் செய்யும் இறைவனது கூத்து "ஆனந்தக் கூத்து" எனவும், பரசிவமாயினர் ஆன்மாக்கள்மீது கொண்ட கருணையாகிய பராசத்தியின் சந்நிதியில் சங்கற்ப மாத்திரையா னிகழுந் தொழில் அதிகார முதல்வர்களானடாத்தப்படும் முத்தொழிலையும் பிரேரித்து ஆதியும் முடிவுமில்லா அற்புதத் தனிக்கூத்தாய் என்றும் ஒரு பெற்றித்தாய் நிற்றலின் அந்நீர்மைத்தாயதிதி "எல்லையில் கூத்து" எனவும், சர்வ சங்கார காலத்து எல்லாப்



பொருளுந் தம்மாட்டு வியாப்பியமா யொடுங்கி நிற்பத்தாந் தனித்து நிற்றலின் அக்கூத்துத் "தனிக்கூத்து" எனவும், நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் எண்பத்து நான்குநூறாயிர யோனிபேதமுமுள்ள ஆன்மாக்கள் தோற்றுதற்கும் முத்தொழிற்குங் காரணமாய் ஆன்ம அறிவு முழுவதையும் மறைத்து நிற்கும் மலசத்தி சடமாதலின் அதனைத் தொழிற்படுத்தும் இறைவனது கூத்து "பெருங் கூத்து" எனவும் பட்டது.

ஸ்ரீ நடராஜப் பெருமான் ஐந்தொழில் நடாத்து மியல்பை;

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதி யமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப் பதத்திலுற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்னுஞ் செய்யுளிற் காண்க.

ஊன்று மலர்ப்பதத்தே ஊற்றமாய் உற்றதிரோதம் என மாறுக. ஊற்றமாயுற்ற திரோதம்—ஏகதேச மல்லாத முழுமறைப்பு.

இனிநடராஜப் பெருமானது திருமேனி அருளுருவமென்பதும் திருச்சிற்றம்பலம் பரஞானாகாச மென்பதும்,

"கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
யற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி."

என்னுஞ் செய்யுளாற் பெற்றாம்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருணிலையினின்ற சிவயோகியரென்பது

"பாசமாம் வினைப் பற்றறுப் பான்மிகு
மாசை மேலுமொ ராசை யளிப்ப தோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
ஈசன ருளெனு நெறிச் சென்றதே"

என்னுஞ் செய்யுளானும் இதுபோன்ற ஏனைய செய்யுட்களானும் பெற்றாம். சிவயோகம்-சிவத்தோடுகூடுதல். சிவயோகம், அருணிலை, (சுத்தாவத்தையில்) துரியநிலை, சாக்கிராதீதம் என்பன ஒருபொருட்கிளவி. உம்மைகள் முற்றோடு எண்ணுமாம். ஏகாரங்கள் பிரிநிலையுந் தேற்றமுமாம்.

இச்செய்யுட்குப் பலவேறுவகைப்பட்ட முத்தி நிலைக்கியையப்பலப் பல பொருள் கூறக்கிடப்பினும் எம்மையாளுடைய நம்பிகளது சிவயோகமாகிய அருள்நிலைக்கேற்ப இங்ஙனம் பொருள்கூறுதல் சிறப்புடைத்தெனக் கொண்டாம்.

௨

# கண்ணப்பர் புராணம் க௫௪-ம் செய்யுள் பொருளுரை.

(குற்றலம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் ஆசிரியர்,
திரு. ப. சிங்காரவேற்பிள்ளை அவர்கள்)

கார்த்திகைத் திங்கள் சிவநேசனில் ஆராய்ச்சி யென்னும் தலைச்சாத்தின் கீழ் இச்செய்யுளுக்கு எழுதிய உரை ஒன்று கண்டனன். அது பெரியார் கருத்துக்கு முழுமுரணாக இருத்தலின் அதற்குப் பொருளுரை எழுதத் துணிந்தனன்.

முன்புதிருக் காளத்தி முன்னவனா ரருள்நோக்கின்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத்
தன்பரிசு மிருவினையுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தி னளவினரோ.

இ—ள். முன்பு—திண்ணனார் நாணனொடு திருமலையில் ஏறின அக்காலத்திலேயே, இன்புறு வேதகம் அத்து இரும்பு பொன்னானால் போல்—தன்னைப்பெற்றவர் இன்புறுதற்கே துவாகிய தரிசனவேதியினாலே, இரும்பானது அதன்களிம்பு நீங்கிப் பொன்னோடு ஒத்து ஒளிபெற்றாற்போல, முன்னவனார் அருள்நோக்கின்—எல்லார்க்கு முன்னவனான இறைவன் திருவருட் பார்வையால், யாக்கை தன் பரிசும், இருவினையும் சாருமலம் மூன்றும் அற—யாக்கைத் தன்மையும், யாக்கையோடுகூடிய உயிரின்தன்மையும், புண்ணியம் பாவமென்னும் இருவகைப் பட்டவினைகளும், சார்தற் கேதுவான ஆணவம், காமியம், மாயை, என்னும் மூன்று மலங்களும் தம்மை விட்டு அறவே ஒழிதலால், அன்புபிழம்பாய்த் திரிவார் - அன்பே வடிவாகிச் சிவஒளிபெற்றுத் திரிதலையுடைய திண்ணனார் அவர் கருத்தின் அளவினரோ—(பின்பு உலகியலில் நிற்கும்) நாகன் முதலிய வேடர்கள் கருத்துக்கு ஒத்தவர் ஆகார் எ—று.

இச்செய்யுள் ஆசிரியரால் வழிமொழிவதாகக் கூறப்பட்டது. வழிமொழிதல் முன்னர்ப் பெறப்பட்டதைப் பின்னரும் மற்றொன்றுபெறுதற் பொருட்டு எடுத்துக்கூறுதல். "கூறியது கூறலும் குற்றமின்றே-வேறொரு பொருளை விளக்குமாயின்" என்பதனாலறிக. முன்மொழிந்ததாவது:

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணுமுன்னே
அங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகலநீங்கிப்
பொங்கிய வொளியினீழல் பொருவி லன்புருவ மானார்.

மற்றொன்றாவது: "அவர்கருத்தினளவினரோ" என்பது. இது கூறுமுகத்தால் முன்னைச்சார்புஎன்பதை மலமூன்றுமெனவும், அவற்றின்காரியங்களை யாக்கைத்தன் பரிசும், இருவினையும்சாருமல மெனவும், விரித்து அம்மலம் தன்னைவிட்டு நீங்கி அன்புருவ மானதற்கு வேதகத்திரும்பு பொன்னாற்



போலென உவமைகாட்டிக் கூறியதும் பிறவுமாம் என்க. முன்னைச்சார்பு: தொன்றுதொட்டுவந்த மும்மலச் சார்பு. இதனைச் "சார்புணர்ந்து சார்பு கெட" என்பதனாலறிக. இன்புறு என்பது வினைத்தொகை. காரணப் பொருள்கொண்டது. இவ்வுவமை அடையைப் பொருளினும் கூட்டுக. வேதகம் தன்னைப்பெற்றவர் இரும்பு பொன்னாகப் பெற்று மகிழ்தற் கேதுவாமாறுபோல முன்னவன் அருள்நோக்கும் தன்னைப்பெற்றவர் மலங்கழிந்து சிவப்பேறு பெற்று இன்புறுதற்கு ஏதுவாகுமெனக் கொள்க. இதுபற்றியே 'விண்களி கூர்வதோர் வேதக' மெனப் பிறாண்டும் வருதல் காண்க.

வேதகம் வேதித்தலைச்செய்வது. வேதித்தல்—அழித்தல். அதாவது அழுக்கை அழித்தல் என்க. வேதகம் காரணப்பெயர், வடமொழி அத்து சாரியை.

வேதகம் தன்னைக்கண்ட இரும்பைவிட்டு நீங்காதகளிம்புநீக்கி அது பொன்னோடு ஒத்துஒளிரச்செய்யும். அதுபோல இறைவனும் தன்னருள் நோக்கால் தன்னைக்கண்ட உயிரை விட்டு நீங்காத ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று அழுக்கும் விட்டு நீங்கவே அது தன்னோடு ஒப்பச் சிவப்பிரகாசம்பெற்று விளங்கச் செய்வான் என்பது. இக்கருத்துப்பற்றியே முன்மொழிதலிலும் "முன்னைச்சார்பு விட்டகல நீங்கி" என்றார்.

காளத்தி வடமொழி அது காரணப்பெயர்.

முன்னவனார் ஆர் உயர்வுசிறப்பு. முன்னவன் 'ஒன்றுமின்றெம்மிறைக்கே' என்பதனால் அறியப்படுகின்ற எவ்வுயிர்கட்கும் முன்னவனான சுத்தசிவமே என்க. அவ்விறைவன் மலபரிபாகமுற்ற உயிர்கட்கு அருள் செய்யும் பொருட்டுத் தானாகவே கொள்ளத்தகுந்த திருமேனிகளாகிய குரு, லிங்க, சங்கமம் என்னும் மூன்றனுள் திருக்கோயில் உள்ளிருக்கும், திருமேனி, என்றவாறு இலிங்கத் திருமேனி கொண்டு ஞான ஆசிரியனாகக் கடைக்கணித்தருளினன் என்பார் முன்னவனார் அருள்நோக்கின் என்றார். ஆர் அருள்நோக்கு எனினும் அமையும். அப்பெருமான் அருள்நோக்கு, பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கி இருவினை யொப்பும் அதன்பின் மலபரிபாகமும் அதன்பின் சத்திநிபாதமும் தோன்றப்பெற்று இறைவனைக் காணுதற்கு உரியஞானக் கண் கொண்டு பார்க்கவல்ல பக்குவ முடையார்க்கன்றி ஏனையோர்க்கு எய்தாது என்பது ஒருதலை. இதனை ஆசிரியர் "கண்ணின் நீடு பார்வைகொண்டு ஒன்றுகொண்டு காணும் அன்பர்முன்—எண்ணில் பார்வைகொண்டு வேடர் எம்மருங்கு மேகினார்" என முன்னும் கூறியதனாலும் "நின்னருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே" எ-ம் அவனருளே கண்ணாகக் காணில் அல்லால்" எ-ம். பரஞானத்தால் பரத்தைத் தரிசிப்போர் பரமே பார்த்திருப்பார் எ-ம். பிறாண்டும் கூறியதனாலும் அறிக.

இனி உயிர்கட்கு மலபரிபாக முண்டான பின்னரே இறைவன் ஞான ஆசிரியனாய்த் தோற்றுவன் என்பதை "கன்ம ஒப்பில் தரையில் ஆசான் மூர்த்தியாதாரமாகித் தரித்தொழிப்பன் மலஞ் சதுர்த்தா சத்திநி பாதத்தால் எ-ம் மலம் முதிர்வித்தரும் பருவமடைதலுமே ஆசானாகி எ-ம்" அருக்

கனோர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு இருட்கண்ணே பாசத்தார்க் கீசன் - அருட்கண்ணால் பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோல் நேசத்தில் தன்னுணர்ந்தார் நேர்" எ-ம் "பங்கந்தான் எழும்ப நமம் பக்குவத்தை அடையப் பரிதி அலர்த்திடுவதுபோல் - பருவஞ்சேர் உயிர்க்குத் துங்க அரன் ஞானக்கண் கொடுத்தருளினால் சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே" எ-ம் விதிநெறி கூறும் முதல்நூல் வழி நூல்களாலும் அறிக.

அங்ஙனமாயின் விதி நெறியிற் கூறியனவெல்லாம் அன்பு நெறியிற் கூறாவதென்னை எனில்! "பத்திவலந்தனை நீ விதியெனக் கூறுதல் பழுது" எ-ம் "பண்டைநல்தவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்-தொண்டரைத் தானே தூயகதியினில் தொகுப்பன் மார்க்கர்—கண்டநூலோதி வீடுகாதலிப் பவர்கட் கீசன்-புண்டரீகத்தாள் சேரும் பரிசினைப் புகலலுற்றாம்". எ-ம் கூறுமுகத்தால் பத்திக்கு நூல்வேண்டா மென்றாலும் அன்புநெறி, விதிநெறி என்னும் இரண்டும் முத்திநெறியே ஆயினும் சாதன இயலால் அவை ஒவ்வாவிடினும் பயனியலால் இரண்டும் தம்முள் ஒக்கும் என்பதை உலகம் அறியஒற்றித்துக் காண்பாராய் முன் மொழிந்ததையே வழி மொழிந்தும் அப்பயனை விளக்கித் தன் கூற்றாகவே இச்செய்யுளைக் கூறினார் என்க. இதனையே "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்று விதிநூலும் பயனியலில் கூறுமாறு காண்க. மும்மலமாகிய பொருளடைக்கேற்பக் களிம்பாகிய உவமை அடையையும் விரித்துக்கொள்க. மும்மலமாகிய பொருளடைக்கு ஏற்ப மூன்றெனக் கூறாது களிம்பென ஒன்றாகக் கூறியது என்னை எனில்! மலங்கள் பொருள்வகையால் மூன்றே என்றாலும் தன்மையாலும், மறைத்தல் தொழிலாலும் அம்மூன்றும் அழுக்கெனப்படலால் ஒன்றேயா மென்பார் மலமென ஒன்றாகக் கூறினாரென்க. இக்கருத்துப் பற்றியே "நெல்லிற் குமியும் நிகழ் செம்பினிற் களிம்புஞ் - சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி - மலகன்மம்" எனப் பிறாண்டும் கூறுதலறிக.

முன்னவனருள் நோக்கினால் மும்மலமும் விட்டு நீங்கவே அவற்றுள் மாயையின் காரியமாகிய யாக்கைத் தன்மையும், ஆணவமலத்தின் காரியமாகிய (ஆன்மபோதம்) பசுத்தன்மையும், கருமத்தின் காரியமாகிய இருவினைகளும் ஒழிந்தன என்பார் "யாக்கைத்தன் பரிசும் இருவினையும் சாருமலம் மூன்றும் அற" என்று உடம்பொடு புணர்த்தோதினார்.

யாக்கைப்பரிசு தன்பரிசு எனப் பரிசை ஈரிடத்தும் கூட்டுக. பரிசு கடைநிலை விளக்கு. தன் என்பது உயிர் "தானெனும் பெயர் நெடுமுதல் குறுகும்" என்பது தொல்காப்பியம். தன் என்பது சாரியை ஆயின் ஒற்றிரட்டாமை கொள்க. "மாலை தன் தாதை தானும்" என்பது சிந்தாமணி. சாரும் என்னும் பெயரெஞ்சு கிளவி மலமென்னும் ஏதுப்பெயர்



கொண்டது அற என்னும் வினையெஞ்சு கிளவி காரணப் பொருட்டு. மும்மலமும் அவற்றின் காரியமும் மெஞ்ஞானிக்காகா என்பதைப்

"புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
அஞ்ஞானங் காட்டும் ஆணவமும் இவைமூன்றும்
மெய்ஞ் ஞானிக் காகாவிடு"

எனவிதி நூல் கூறுமாற்றாலும் அறிக.

சாருமல மென்பதற்கு அநாதியே உயிரைச் சார்ந்தமல மெனினும் அமையும். முன்னைச் சார்பென ஆசிரியர் முன் மொழிந்ததும் இக்கருத்துப் பற்றியதே ஆம் என்க.

யாக்கைத் தன் பரிசும் இருவினையும் சாருமல மூன்றுமற என உடம்பொடுபுணர்த்தோதினமையால் யாக்கைத் தன்மையான தன் கரணமும், பசுத் தன்மையான ஆன்மபோதமும், இருவினையான தன் செயலும் முறையே சிவகரணமும், சிவபோதமும், சிவச்செயலும் ஆகமாறிவிட்டன என்பார் அன்பு பிழம்பாய்த் திரிவார் என்றார். இதனை "மருவு கரணம் சிவகரணமாக" எ-ம். "நஞ்செயலற்று நாமற்றபின் நாதன் தன் தானே யென்றுந் தீபற - தன்னையே தந்தா னென்றுந் தீபற" எ-ம். வருவனவற்றால் அறிக. அங்ஙனமாயின் சிவப்பிழம்பாய்த் திரிவார் எனக் கூறாது அன்பு பிழம்பாய்த் திரிவா ரெனக் கூறியது என்னை எனில்! இறைவன் திருநோக்கால் மும்மல வெப்பமும் தீர்ந்தொழியவே "எந்தையீசன் இணையடி நீழலே" என்றபடி சிவ ஒளியே நிழலாய் இன்பஞ் செய்யப்பெற்று இறைபணி நீங்காமல் பேரன்பே வடிவாய்த் திரிதலானார் என்னும் பத்திநெறி தோன்ற "முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப் பொங்கியவொளியினீழல் பொருவிலன்புருவமானார்" என்று முன் மொழிந்தமையாலும் "உள்ளத்தில் தெளிகின்ற மெய்ம்மையன்பின் உருவினையும் அவ்வன்பினுள்ளே மன்னும் வெள்ளைச் செஞ்சடைக் கற்றை நெற்றிச் செங்கண் விமலரையும் உடன்கண்ட விருப்பம் பொங்க" என அன்பும் சிவமுமாகிய இரண்டையும் நன்கு விளக்கினமையாலும் அன்புநெறி, விதிநெறிகளாகிய முத்திநெறி இரண்டனுள் அன்பு நெறியே ஈண்டுக் கூறுதலாலும், "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனப் பிறாண்டும் கூறுதலாலும், பொன்னுறைப் போலென உவமை காட்டினமையாலும், அன்பு பிழம்பாய்த் திரிவாரெனச் சுருக்கி வழிமொழிந்தா ரென்க.

யாக்கைத் தன் பரிசும் இருவினையும் அன்புபிழம்பாய்த் திரிவாரெனக் கூட்டிப் பொருளுரைப்பினும் அமையும். திரிதல் - வேறுபடுதல். அதாவது பெத்த நிலையை விட்டு முத்தநிலை யுடையராய் மாறுதல் என்பது. இதனை முன் செய்யுளில் "எல்லாம் பேதித்துக் காணும் நெறி தங்கள் குறிவாராமல் கைவிட்டார்" என ஆசிரியர் கூறினமையாலும் அறிக.

இதனால் முன்பு "ஆசைதரும் உலகமெல்லாம் அலைசைத் தோரா" மென்றவாறு காண்கின்ற திண்ணனாருக்கு உலகாசாரம் அறவே ஒழிந்தமை

யால் பின்பு உலக இயலில் நிற்கும் நாகன் முதலிய வேடர்கள் கருத்தின்படி உலக இயலில் நில்லார் எனவும், அவர் அங்கிங் கெனாதபடி நின்ற சிவ மாயினமையால் சிற்றறிவினராகிய வேடர்களால் தங்கருத்தே அளவாகக் கொண்டு அவர் இத்தகைய அறிவு, இச்சை, செயல்களை உடையரென அளந்திடப்படார் எனவும் இருபொருள் தரவே 'அவர் கருத்தினளவினரோ' என்றார். முன்பு திரிவார் என்றமையால் பின்பு அளவினரோ எனக் கூட்டப்பட்டது. பின்பு சொல்லெச்சம். ஓ. எதிர்மறைப் பொருளில் வந்தது.

## இனி, ஆராய்ச்சியாளர் உரைவழுக்கள் வருமாறு.

*எல்லாம் பேதித்துக்காணும் நெறி என்று முன் செய்யுளில் கூறியதையே இங்கு அநுவதித்தார் என்றார். "திங்கள் சேர் சடையார்" என்னும் செய்யுளை நோக்கிலர் போலும்.*

*இருவினைப்பாசம் அறவே மலபந்தமும் ஒருங்குநீங்கி மலபரிபாகம் எய்தப் பெறுவதென்றார். மலபந்தம் நீங்கின பின்னர் மலபரிபாகம் உறுமோ? அறியாமை யுடையாரும் இங்ஙனங்கூறார்.*

*மல பந்தம் ஒருங்கு நீங்கி மலபரிபாகம் எய்தப்பெறுவதாம் என்று தாம் முன் சொல்வதை மறந்து மலம் அறுதல்; மலபரிபாக முறுதல் என்றார்.*

*காளத்தியப்பர் நோக்கால் இருவினையும் மும்மலமும் அற்று இருவினை யொப்பும் அதிதீவிர சத்திநி பாதமும் எய்தி என்றார்.*

*மும்மல மற்றபின்னே இருவினை யொப்பும் சத்திநிபாதமும் உண்டாதல்? இது சித்தாந்திகள் கூறார்.*

*இருவினையறுதல்: இருவினை ஒப்பு என்றார் எந்நூல் பிரமாணமோ.*

*யாக்கைத் தன் பரிசு என்பதற்கு யாக்கையினது பரிசெனத் தன் என்பதைச் சாரியையாகக் கொண்டு உரைவகுத்தார். சாரியையாயின் இரட்டாமையை அறிந்திலர். மேல் காட்டிய உதாரணங்களால் அறிவாராக.*

*யாக்கை: இருவினைபாசத்தால் மும்மலங்களும் யாக்கப்பட்டதனுடைய உடல் என்றார். எழுவகைத்தாதுக்களால் கட்டப்பட்டது யாக்கை என்பதும் அறிந்திலர். உயிரைப் பற்றிய மலத்தை உடலைப்பற்றியதாகக் கூறினர். உயிர் உடல் என்ற இவற்றின் வேற்றுமை அறிந்திலர். இவ்வாறே ஆராய்ச்சியாளர் உரையில் குற்றம் ஆராயப்புகின் மணற்சோற்றில் கல்லாராயப் புகுவது ஒக்குமெனச் சில காட்டி விடுத்தனன். அறிஞர் ஆராய்ந்து தெளிக.*

———

உ

# நத்தலீனில் டாக்டர் பாமோ

———

24-12-34 டாக்டர் பாமோ வருகையின் பொருட்டு பொதுமக்கள் இரண்டாயிரம் பேர் வரை புகைரத நிலையத்தில் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். பகல் 2½ மணிக்கு மந்திரி பாமோ தமது சகாக்களுடன் வந்துசேர்ந்தார். பர்மியவாத்தியம்முழங்கின. சாரணச் சிறுவர்கள் அணிவகுத்துநின்றகாட்சி மெச்சத்தகுந்தது. நத்தலீன் நகரசபைத்தலைவர் ஊத்தெய்ங்மவும் அவர்களால் வரவேற்கப் பட்டு காரில் நகரசபைப் பந்தலுக்குப் புறப்பட்டார்கள். வரும் வழியில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் மிகத்திறம்பட பல தேசத்துக் கொடிகளாலும் தோரணங்களாலும்வாழைமரங்களாலும்அலங்கரிக்கப்பெற்ற கொட்டகையில் மந்திரியவர்களை செட்டியார்களின் சார்பாக ரெங்கோன் நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள் சங்கத்தலைவர் திரு. சா. அ. ச. இராமன் செட்டியாரவர்களால் கரகோஷத்தினிடையே பொன்மாலைசூட்டி வரவேற்கப்பட்டது. மந்திரி அவர்களுக்கு ஓதிக்கோன் செட்டிநாட் பேங்க் மானேஜர். திரு. முத்தையாசெட்டியாரவர்களால் நத்தலீன் செட்டியார்களை அறிமுகம் செய்து வைக்கப்பெற்றபின் மந்திரியைநகரசபையில் வரவேற்று உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். மந்திரி பதில்கூறியபின் தேக்கச்சேரி நடந்தது.

செட்டியார்களின் விருந்து:— 25—12—34 அன்று நகரசபைக்கல்லூரியில் பகல் பதினொருமணிக்கு மந்திரி செட்டியார்களால் வரவேற்கப் பெற்று திரு. சா. அ. ச. இராமன்செட்டியார் அவர்களால் அழகிய மலர்மாலை அணிவிக்கப் பட்டார். பின்னர் ஏனைய பிரமுகர்களுடன் ரங்கோன் பர்மா கேவ் கம்பெனியார் தயாரித்த அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது. பின் திரு. ராம. அரங்கநாதன், செட்டியார்களின் சார்பாக உபசாரப் பத்திரம் வாசித்து வெள்ளிப்பேழையில்வைத்துக்கொடுத்தார். அதற்குமந்திரி அவர்கள் பர்மிய பாஷையில் பதில் கூறியதாவது:—

பெரியோர்களே! செட்டியார்களே! இன்று நத்தலீன் செட்டியார்கள் எனக்கு விருந்தளித்தமைக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். இந்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வேளாண்மைக்குகந்த நிலங்கள் இருந்ததைவிட இப்பொழுது அதிகமாய்ப்பெருகி யிருப்பதற்குக்காரணம் செட்டியார்கள் பர்மியர்களை நம்பிப் பணம் கொடுத்துச் சீர்திருத்தம்செய்ததே. ஆனால் செட்டியார்கள் நிலம் வீடு முதலான இதர சொத்துக்களைத் தாங்கள் அடைய வேண்டுமென்று பேராசைப்பட்டு கடன் கொடுத்தவர்களல்ல. அவர்கள் கொடுத்த முதலும் வட்டியும் கிடைத்தால் போதுமானதென்று கருதியே கொடுத்து வந்திருக்கிறார்களென்

பதை நன்கு அறிவேன். உதாரணமாக நான் வக்கீல் தொழில் செய்யுங் காலத்து செட்டிநாட் பேங், யெபி. ராம. கடை, சா. அ. ச. கடைகளில் கடன் வாங்கிய ஆசாமிகளிடத்தில் இருந்த பெறுமதி யில்லாத சொத்துக்களைக் கொடுத்துப் பெரும்பாலான கணக்குகளை இரு திறத்தாருக்கும் இராசியோடு தீர்த்துவிட்டிருக்கிறேன். இப்பொழுது பர்மியர்களுக்கு அதிகமான கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோலவே செட்டியார்களுக்கும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பர்மியர்களுக்கு கஷ்டம் ஏற்பட்ட காலத்து செட்டியார்கள் உதவவேண்டும். செட்டியார்களுக்கு கஷ்டம் வந்த காலத்து பர்மியர்கள் உதவவேண்டும். இருதிறத்தாரும் நிரம்பநேசப் பான்மையோடு இருக்கவேண்டுமென்று உங்களை நிரம்பவும் வேண்டுகிறேன். (கரகோஷம்)

இவர்களைவிட மற்றஇங்கிலீஷ் பேங், பர்மிய செல்வவந்தர்கள் எவ்வளவுபேர் இருந்தாலும் பர்மியர்களை நம்பிக் கடன் கொடுக்க இசையார்கள். பர்மியர் முதலியோருக்கு பெரும்பணம் கடன் கொடுத்துத் திரும்பிப்பெற வழியில்லாமையால் ரெங்கோனில் பல பெரிய செட்டியார்கள் கடைகள் இன்சால்வெண்ட் ஆனதை நான் அறிவேன். செட்டியார்கள் வட்டிமிச்சத்தைக் கருதியே பெரும்பணம் இந்நாட்டில் கொடுத்து உதவி செய்திருக்கிறார்களென்று நன்கு விளங்குகிறது.

பொதுவாகப் பர்மியர்களும் இந்தியர்களும் பல ஆண்டுகளாக சிநேக பான்மையுடன் இருந்து வந்ததுபோல் இனி எப்பொழுதும் இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்பொழுது நடைபெற்ற விருந்துக்கு செட்டியார்களும் பர்மியர்களும் ஒற்றுமையில்லாவிட்டால் செட்டியார்கள் விருந்துக்கு பர்மியர்களைக் கூப்பிட்டிருக்கமாட்டார்கள். பர்மியப் பிரமுகர்களும்வந்திருக்கமாட்டார்கள். இப்பொழுது எல்லாப் பிரமுகர்களும் வந்தது இருதிறத்தாருடைய சிநேகப் பான்மையையும் நல்லெண்ணத்தையும் நன்கு காட்டுகிறது. ஆதலால் தனதனவான்களே! செட்டியார்களே! பர்மா பிரிவினை ஆனாலும் நம் இருதிறத்தாரும் பாகுபாடின்றி ஒற்றுமையாகஇருப்போம் என்பதைப் பூர்ணமாய் நம்புங்கள். நான் உள்ளேயிருந்தாலும் வெளியில் இருந்தாலும் இந்தியர்களுக்கும் பர்மியர்களுக்கும் நேசப்பான்மையை விருத்திசெய்வதற்குப் பாடுபடுவேன் என்பதை நன்கு அறியுங்கள். (கரகோஷம்) எனக்கு விருந்தளித்து இவ்வளவு பெருமைப் படுத்திய நத்தலீன் செட்டியார்களை எவ்விதத்திலும் நான் மறக்கமுடியாது. இவ்விருந்து நல்ல நாகரீக முறையில் இருந்தது பற்றி நிரம்ப சந்தோஷப் படுகிறேன். என்னைப் பெருமைப்படுத்திய செட்டியார்களுக்கும் ஏனைய பிரமுகர்களுக்கும் மீண்டும் எனது மனமார்ந்த வந்தனத்தைச்செலுத்தி என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.



என்று மந்திரியவர்கள் கூறினர். கூட்டம் நன்கு நிறைவேறியது. மந்திரி அவர்கள் பகல் இரண்டரை மணி புகைரதத்தில் பவுண்டை சென்றார்கள்.

## கூட்டுக் கமிட்டி அறிக்கைக் கண்டனம்.

இந்திய வியாபார சங்கங்கள், ஐக்கிய சபையில் நிர்வாகக்கமிட்டியார் கூட்டுக்கமிட்டி அறிக்கைபற்றி தயாரித்துள்ள அறிக்கையில் பர்மா இந்திய பிரச்னை சம்பந்தமாகக் கூறுவதாவது:—

இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டபின் பர்மாவின் எதிர்கால நிலைமைபற்றி கூட்டுக்கமிட்டியார் சிபார்சுகளைக் கண்டு ஐக்ய சங்கக் கமிட்டியார் பெரிதும் கலக்கமடைகின்றனர். பர்மாவின் நன்மை இந்தியாவின் நன்மை இரண்டும் ஒன்றிற்கொன்று முரணாக இருப்பதாகக் கூறிக்கொண்டு அவை இரண்டிற்கு மிடையில் தாங்களே மத்யஸ்தராக இருந்து நியாயம்வழங்குவதாகச் சொல்லிக்கொள்ளும் கூட்டுக்கமிட்டியார் முற்றிலும் பட்சபாதமுடையவர்களாய் காணப்படுகின்றனர் என்பதை ஐக்யசங்கக்கமிட்டியார் மறைப்பதற்கில்லை. பர்மாவில்பிரிட்டிஷார் நலன்களைப் பாதுகாக்க் கூட்டுக் கமிட்டியார் இதுவிஷயங்களில்கூட கண்ணுங் கருத்துமாய் விசேஷ கவலையெடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் இந்தியர்உரிமைகள் சம்பந்தமாகவோ சிறிதும் பொறுப்பின்றி வெகு அலட்சியமாய் அவைகளை எல்லாம் பிரிட்டன் பர்மா இரண்டின் நலன்களுக்காக ஒதுக்கித் தள்ளிவிட முயல்கின்றனர்.

இந்திய தொழிலாளர் குறைந்தகூலி பெறுவதால் அவர்களிடமிருந்து பர்மிய தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டியதுதான்; ஆனால் அதைக் காரணமாகச் சொல்லி இந்தியர் அனைவருமே பர்மாவிற்குள் தடையின்றி வருவதைத்தடுப்பது இந்தியரை விலக்கிவிட்டு பிரிட்டிஷார்க்கு மட்டுமே பர்மாவை ஏகபோகமாக்கிவிட எண்ணும் சிறிதும் யோசனையற்ற முயற்சியேயாகும். பர்மாவின் தற்கால பொருள்வள நிலைமைக்கு எப்பொழுதுமே முக்கிய காரணஸ்தராயிருந்துவரும் இந்திய செட்டியார்களின் பேரில் முற்றிலும் ஆதாரமற்ற அவதூறுகளைச் சுமத்துவதை இந்த ஐக்ய சங்கக் கமிட்டி அழுத்தமாக மறுக்கின்றது. கூட்டுக் கமிட்டி அறிக்கை செட்டியார்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் என்று எதிர்பார்த்தார்களேயன்றி இந்தியர் பர்மாவிற்குத் தாராளமாய் வந்து வியாபாரஞ் செய்வதைத் தடுப்பதற்காக செட்டியார்களையும் செட்டியார் தொழில் முறைகளையும் காரணங்களாகக் கூறும் என்று எதிர் பார்க்கவேயில்லை. இந்தியா பிரிட்டன் இரண்டிற்கும் வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப் போவதாகக் கூறும் வியாபாரப் பாதுகாப்புகள் அமுலில் இருக்கமாட்டாவென்று கூறுவதையும் ஐக்யசங்கக்கமிட்டி கவனிக்கின்றது. (தனவணிகன்)

## தொண்ணூற்றாறூர் தனவைசிய நகரத்தார்கள் பவ ௵ மார்கழி ௴ ௧௬ உ கோயிலூரில் பொதுக்கூட்டம் கூடிச்

# செய்த தீர்மானங்கள்.

---

1-வது தீர்மானம்:—'நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தார் ராஜ விசுவாசத்தோடும், அமைதியோடும் சுமார் 100 வருடங்களாக பர்மாவில் சுமார் 80 கோடி ரூபாய்க்குமேல் லேவாதேவி செய்து விவசாயத்துக்கும், வியாபாரத்துக்கும், கைத்தொழிலுக்கும் ஒத்தாசை செய்துவந்தும், இவைகளில் இருந்து நம்மால் தான் கவர்ன்மெண்டுக்கு நிலவரிகளை அதிகமாகவும் சல்லிசாகவும் நம்மவர்கள் கொடுத்து வசூலாகி வருவதையும், அந்த ஒத்தாசைகளை கவர்ன்மெண்டாரும் பல பிரமுகர்களும் ஒப்புக் கொண்டிருந்தும், கூட்டுக்கமிட்டி அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லாததுமன்றி அந்த அறிக்கையில் 473-வது பாராவில் நம் சமூகத்தினர் தொழில் முறையை இழிவுபடுத்திக் கூறியிருப்பதோடு, நம் சமூகத்தினரின் உரிமையைப் பாதுகாக்க ஒருவித திட்டமும் செய்யாதது மிகவும் வருந்தத் தக்கதென இக்கூட்டத்தார் தீர்மானிக்கின்றார்கள்.'

2-வது தீர்மானம்;—'நகரத்தார்களுக்குப் பர்மா சட்டசபைகள் இரண்டிலும் போதுமான பிரதிநிதித்துவம் கொடுப்பதுடன், நம்மவர்கள் உரிமையைக்காப்பாற்ற பர்மா சட்டத்தில் விதிகள் ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்று கெவர்மெண்டாரவர்களை மிகவும் வற்புறுத்தி மரியாதையாகக்கேட்டுக் கொள்ளுகிறது.'

3-வது தீர்மானம்:—'இந்தியர்கள் பர்மாவிற்குள் தாராளமாய் வருவதைத் தடுக்கக்கூடிய சட்டங்களைச் செய்ய பர்மா சட்டசபைகளுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதை இக் கூட்டத்தார் கண்டிப்பதோடு, நல்ல அந்தஸ்துள்ள இந்தியர்களைக் காரணமின்றி பர்மாவிற்குள் வருவதைத் தடுக்கச் செய்யும் சட்டங்களுக்குக் கவர்னரின் அங்கீகாரம் வாங்கவேண்டுமென்னும் பாதுகாப்பு பயனற்றதென்று கருதுவதோடு, இந்தியர்கள் யாவரும் முன்போலவே பர்மாவிற்கு எவ்விதத்தடையுமின்றிப்போகவர இருக்கும் உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்று இக்கூட்டத்தார் வற்புறுத்துகின்றார்கள்.'

4-வதுதீர்மானம்:—'விவசாயத்துக்குப் பர்மாக்கூலிகளுடன் இந்தியக் கூலிகளும் அவசியம் தேவையிருப்பதால், இந்தியத்தொழிலாளர்களும் இன்னும் மற்ற இந்தியர்களும்முன்போலவே எவ்விதத்தடையுமின்றிப்பர்மாவுக்கு போய்வரலாமென்று இப் பார்லிமெண்டார் ஏற்படுத்தும் சட்டத்திலேயே ஒருவிதி யேற்படுத்தவேண்டுமாயும் இக்கூட்டத்தார் தீர்மானிக்கின்றார்கள்.'

5-வது தீர்மானம்:—'பர்மா விவசாயிகளிடமிருந்து அவர் நிலங்களை பறித்துக் கொள்ளும் நோக்கத்தோடு கூடிய வேண்டப்படாத ஒரு சமூகத்தார் என்று பொருள்படும்படி 473-வது பாராவில் காணப்பெறும் குறிப்புகளை முற்றிலும் ஆக்ஷேபிப்பதுடன் நாங்கள் வியாபாரமுறையில் கடன்கொடுத்து வாங்கியதில் இப்பொழுது உலகமெங்கும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் வேறு வழி ஒன்றும் இல்லாமல் கடன் வாங்கியவர்கள் சம்மதத்துடனும் அவர்கள்வேண்டுகோளுக்கு இணங்க நிலங்களை ஒப்புக் கொண்டுஇருப்பதில் உலகப்பொருளாதாரநிலைமைமேன்மையடைந்துநிலங்களை நஷ்டமின்றி விற்கும்சமயம் எப்போதுவரும் என்றுஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றும்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.'

6-வது தீர்மானம்:—'ரெங்கோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தார் நம்மவரின் உரிமைகளைப் பாதுகாக்க எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளை இக் கூட்டத்தார் பாராட்டுவதுடன் ரெங்கோனில் 14-12-34-ல் நடைபெற்ற அகிலபர்மா செட்டியார்கள் மகாநாட்டின் தீர்மானங்களை முழுமனதுடன் ஆதரித்து, இனியும் நம் உரிமைகளுக்குப் பாதுகாப்புகள் உண்டாவதற்கு இம்முயற்சிகளை ஊக்கத்துடன் செய்துவர வேண்டியது அவசியமென இக் கூட்டத்தார் தீர்மானிக்கின்றார்கள்.'

7-வது தீர்மானம்:—'பர்மா பிரிவினையால் இனிவரும் சிரமங்களைத் தடுக்கவும், நம் உரிமைகளைப் பாதுகாக்கவும் தொடர்ந்துவேலைசெய்யவேண்டியது அவசியமானதால் அப்பொறுப்பைக் கீழ்க்கண்டவர்கள் ஒரு கமிட்டியாக யிருந்து அக் கமிட்டியார் மாக்ஷிமை தங்கிய ராஜப் பிரதிநிதி அவர்களையும், மாக்ஷிமை தங்கிய சென்னை கவர்னர் அவர்களையும், போய்ப்பார்த்துச் சொல்லியும், இன்னும் இதர பிரமுகர்களையும் பார்த்து வேண்டியவைகளை யெல்லாம்செய்தும் இதுசம்மந்தமான இதர வேலைகளைக் கவனித்தும் வர வேண்டுமென்று இக் கூட்டத்தார் தீர்மானிக்கின்றார்கள்.'

8-வது தீர்மானம்:—'பர்மா பிரிவினையில் நம் உரிமைகளை பாதுகாக்க இக் கூட்டத்தாரும் அதன் கமிட்டியாரும் செய்யும் முயற்சிகளுக்குநேரிடும் செலவுகளுக்கு பர்மாநாட்டுக்கோட்டைச்செட்டியார்சங்கப்பண்டில் இருந்து இதன்கமிட்டியாருக்கு வேண்டும் தொகையை கமிட்டிக்காரியதரிசி எழுதி வருத்திக்கொள்கிறது என்று இக் கூட்டத்தார் தீர்மானிக்கின்றார்கள்.'

9-வது தீர்மானம்:—'இன்று செய்த முதல் ஐந்து தீர்மானங்களை கமிட்டியார் கெவர்மெண்டாருக்கும், ரெங்கூன் நம் சங்கத்தாருக்கும் பூரா தீர்மானங்களையும் தெரிவிக்க வேண்டுமெனவும் இன்னும் அனுப்ப வேண்டியவர்களுக்கு அனுப்பும்படியும் இக் கூட்டத்தார் தீர்மானிக்கின்றார்கள்.'

## கமிட்டியின் மெம்பர்களாகிய திருவாளர்கள்.

1 கனம் டாக்டர் ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் தலைவர்.
2 அழ. அரு. காளைராஜா செட்டியார், தேவகோட்டை.
3 ராவ்பகதூர் உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியார் காரியதரிசி.
4 கா. இராமநாதன்செட்டியார் அட்வகேட் பள்ளத்தூர். [பள்ளத்தூர்.
5 எ. நா. காசிவிஸ்வநாதன் செட்டியார், கீழச்சிவல்பட்டி.
6 சொ. சோமசுந்தரச் செட்டியார், பாரிஸ்டர், செவ்வூர்.
7 முரு. பழ. மு. அ. சிவலிங்கம் செட்டியார், நெற்குப்பை.
8 கும. கு. ராம. இராமன் செட்டியார், வேகுப்பட்டி.
9 வெ. மு. சி. பெ. மு. பெரியணன் செட்டியார், இராயபுரம்.
10 ராவ்பகதூர் சு. அ.சு. இராமநாதன் செட்டியார், காரைக்குடி.
11 மு. ராம. பெரியணன் செட்டியார், காரைக்குடி.
12 சி. மு. அரு நாராயணன் செட்டியார், காரைக்குடி.
13 முத்து. சரு. அரு. வேங்கடாசலம் செட்டியார், தேவகோட்டை.

14 உ. ராம. மெ. சு. மெ. மாணிக்கவாசகன்செட்டியார், தேவகோட்டை.
15 கூ. அரு. க. அருணாசலம் செட்டியார், கீழப்பூங்குடி.
16 சி. அரு. சின்னன் செட்டியார், அலவாக்கோட்டை.
17 அரு. சேவு. சேவகன் செட்டியார், நாட்டரசன்கோட்டை.
18 சி. கரு. சி. சரு. ஆதப்ப செட்டியார், ஒக்கூர்.
19 வீர. சௌரிராஜன் செட்டியார், அழகாபுரி.
20 அ. லெ. நடராஜன் செட்டியார், ஆத்தங்குடி.
21 மு. சித. சிதம்பரம் செட்டியார், கானாடுகாத்தான்.
22 ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.
23 திவான்பகதூர், அ. மு. முருகப்ப செட்டியார், பள்ளத்தூர்.
24 அ. க. அ. சித. அழ. அழகப்ப செட்டியார், கோட்டையூர்.
25 வெ. பெரி. பழ. காசிவிஸ்வநாதன் செட்டியார், பாகனேரி.
26 வயி. அ. அண்ணாமலை செட்டியார், கண்டனூர்.

இப்பொதுக்கூட்டம், கானாடுகாத்தான் திருவாளர், குமாரராஜாமுத்தைய செட்டியார்; பள்ளத்தூர், திருவாளர், உ. அ. பெரி. மு. அருணாசலச்செட்டியார்; திருவாளர், அட்வகேட், கா. இராமநாதன்செட்டியார்முதலானவர்களின் நன்முயற்சியால் கூட்டப்பெற்றது. அனேகம் ஊர்களிலிருந்து நகரத்தார்களின் பிரதிநிதிகளாக முன்னூறு பேர்கட்குமேல் வந்திருந்தார்கள்.

சிவநேசன் இராமசாமி செட்டியார், கடவுள் வாழ்த்துடன்முன்னுரை கூறியதும் மகாநாடு ஆரம்பமாகியது.

காரைக்குடி, திருவாளர், மு. ராம. பெரியண்ணன் செட்டியார் பிரேரேபிக்க, பள்ளத்தூர் திருவாளர், ராவ்பஹதூர், உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியார், ஆமோதிக்க தேவகோட்டை, ஜமீந்தார், அழ. அரு. வெள்ளையன் செட்டியாரவர்களின் குமாரர் திருவாளர், சோமநாதன்செட்டியார் தலைமை வகித்து முகவுரை கூறினார்கள்.

## தீர்மானங்கள் கொண்டு வந்த திருவாளர்கள்.

1 செட்டிநாடு, குமார ராஜா, முத்தைய செட்டியார்.
2 காரைக்குடி, ராவ்பஹதூர், சு. அ. சு. இராமநாதன்செட்டியார்.
3 கானாடுகாத்தான், வயி. சு. சண்முகம் செட்டியர்.
4 வலையபட்டி, மது. கும. குமரப்ப செட்டியார்.
5 கோனாபட்டு, பி: மு. பி. சுப்பிரமணியன் செட்டியார்.
6 பள்ளத்தூர், அ. மு. மு. முருகப்ப செட்டியார்.
7 பலவான்குடி, சிவநேசன், இராமசாமி செட்டியார்.
8 ஒக்கூர், சி. க. அரு. கரு. சோமசுந்தரம் செட்டியார்.
9 காரைக்குடி, மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார்.



## ஆமோதித்தவர்களும் ஆதரித்தவர்களுமாகிய திருவாளர்கள்.

1 காரைக்குடி, சொ. முருகப்பர்.
,, காரைக்குடி, சி. மு. அரு. நாராயணன் செட்டியார்.
2 கீழச்சிவல்பட்டி, எ. நா. காசிவிஸ்வநாதன் செட்டியார்.
,, பள்ளத்தூர், சொ. மு. அ. நடேசன் செட்டியார்.
3 நாட்டரசன்கோட்டை, அரு. சேவு. சேவகன் செட்டியார்.
,, செவ்வூர், பாரிஸ்டர், சொ. சோமசுந்தரச் செட்டியார்.
4 புதுப்பட்டி, மு. வீர. வீரப்ப செட்டியார்.
,, கீழப்பூங்குடி, கூ. அரு. க. அருணாசலச் செட்டியார்.
,, வேகுப்பட்டி, கு. ம. கு. ராம. இராமன் செட்டியார்.
5 ஆத்தங்குடி, வ. வி. சத்தியவாசகன் செட்டியார்.
,, இராயவரம், வெ. மு. சி. பெ. மு. பெரியணன் செட்டியார்.
,, கொத்தமங்கலம், சி. ராம. மு. இலக்குமணச் செடடியார்.
6 சொக்கலிங்கம்புத்தூர், சு வீர. வீரப்பசெட்டியார்.
,, பாகனேரி, ஆரு. வே. குழந்தைவேலன் செட்டியார்.
,, கண்டனூர், ஆத. வெ. பழ. அரங்கநாதன் செட்டியார்.
,, புதுவயல், அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார்.
,, ஆவினிப்பட்டி, ஆக. மு. இலக்குமணச் செட்டியார்.
7 பள்ளத்தூர், அட்வகேட், கா இராமநாதன் செட்டியார்.
,, நாச்சியார்புரம், சு. வி. நா. நாச்சியப்ப செட்டியார்.
8 கீழச்சிவல்பட்டி, மு. அழ. ஆரியன் செட்டியார்.
,, பள்ளத்தூர், ராவ்பகதூர், உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியார்.
,, கோட்டையூர், அக. அ சித. அழ. அழகப்ப செட்டியார்.
9 கோட்டையூர், க. வீ. சொ. அழகப்ப செட்டியார்.
,, பள்ளத்தூர் வீர. முரு. ராம. இராமசாமி செட்டியார்.

தீர்மானங்களைப் பிரேரேபித்தவர் ஆமோதித்தவர்களில் பலர், விஷயங்களை எடுத்து விளக்கினர். தீர்மானங்கள் யாவும் கூட்டத்தினரின் ஒருமித்த மனதுடன் ஒப்புக்கொண்டு நிறைவேறின. தலைவர் கூட்டத்தைத் தக்கவாறு நடத்தி முடிப்புரைகூறி, கல்கத்தாவிலிருந்து செட்டிநாட்டு ராஜா அவர்கள், போதாவுடன் அனுப்பி வந்த தந்தியைப்படித்தனர். தலைவராதிய அனைவர்க்கும், கோவிலூர் மடாலயகர்த்தர், உயர்திரு. மகாதேவஞான தேசிக சுவாமிகட்கும் சிவநேசன் இராமசாமி செட்டியார் வந்தனங் கூறினர். இறைவன்திருவருளால் இனிது நிறைவேறியது.

———

யுவ வருஷ வாக்கிய பஞ்சாங்கம்:— யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஸம்ஸ்கிருத திராவிட பண்டிதரும் சோதிட கணித சித்தாந்தியும் வித்தியா விருத்தி தர்மகர்த்தரும் ஆகிய பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள் அனுமதிப்படி அவரது சகோதரரின் புத்திரராகிய பிரமஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரியாரவர்களாற் கணிக்கப்பெற்றது. சோதிடங்கள் பலவற்றையும் தன்னுட்கொண்டு திதி முதலிய பஞ்சாங்க நிர்ணயம் செவ்வனே செய்யப்பெற்று, உயர்திருநாட்கள், நாயன்மார்களின்குருபூசை, ஆழ்வாராதியர் திருநட்சத்திரம், இந்திய தேவாலய உற்சவ விவரங்கள் ஆதிய பலவும் விளக்கிக் காட்டும் விழுப்பமிக்கது. இதன் விலை அணா நான்கு பருத்தித்துறை தருமாலயம் பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களிடம் பெறலாம்.

திருப்புனவாயிற் புராணம்:—திருவாரூர் தியாகராஜ கவிராஜ தேசிகர் இயற்றியது. தேவகோட்டை மகாவித்வான் ஸ்ரீமாந் வீ. லெ. இலக்குமணச்செட்டியாரவர்களாகிய சிந்நய்யச் செட்டியாரவர்களால் பரிசோதிக்கப் பெற்றும், திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும் தேவகோட்டை சித்தாந்தபரிபாலனசங்கத்துச் சித்தாந்த சாத்திரபோதகருமாகிய திருவாளர் தூத்துக்குடி, பொ. முத்தையா பிள்ளையவர்களால் அரும்பதவுரையெழுதப்பெற்றும், திருப்புனவாயில் தேவாலய தருமபரிபாலன கர்த்தரும் தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்க அத்தியக்ஷருமாகிய தேவகோட்டை திருவாளர், அழ. சுப. சுப்பிரமணியச் செட்டியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்றது. திருநாட்டுச் சருக்கம் முதல் 22 சருக்கங்களையுடையது. பாயிரம் உள்ளிட்ட செய்யுட்கள் 928. இத்திருத்தலம் பாண்டி பதினான்கனுள் ஒன்றும் முதன்மையும் ஆகியது. இத்திருதலத்தில் பாண்டி பதினான்கு சிவலிங்கமூர்த்தங்களும் அமைந்துள்ளன. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருளிய தேவாரத் திருப்பதிகமும், சுந்தரமூர்த்தி நாயனாருளிய தேவாரத் திருப் பதிகமும் இத்தல புராண முகப்பிற் சேர்க்கப்பெற்றுள்ளன. இத்திருத்தலத்திற்குப் பழம்பதி என்னும் திருப்பெயர். இதனை சுவாமியின் திருநாமம் பழம்பதிநாதர் என்பதனாலும் சுந்தரமூர்த்தி நாயனார்,

"பத்தர்தாம் பலர்பாடி நின்றாடும் பழம்பதி"
"பாசற்றவர் பாடி நின்றாடும் பழம்பதி"

எனவும் திருநாவுக்கரசு நாயனார் "பற்றற்றார் சேர்பழம்பதியை" எனவும் மாணிக்கவாசக சுவாமிகள் "பாண்டிநாடே பழம்பதியாகவும்" எனவும் அருளினமையாலும் தெளியலாம். இத்தலபுராணச் செய்யுள் தனிப்புத்தகமாகவும், அதற்கு, திருவாளர் பொ. முத்தையபிள்ளையவர்கள் இயற்றிய வசனம் தனிப்புத்தகமாகவும் வெளியிட்டுள்ளார்கள். இப்புத்தகம் இரண்டையும் சிவநேசச் செல்வர்கள் ஒவ்வொருவரும் பெற்றுப் படித்து, மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியவைகளின் சிறப்பை முழுதும் உணர்ந்து தேவதேவன் திருவருள் பெற்று வாழ்வார்களாக.

———



"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை"

என்பதைக் குறித்து, 'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மையடைதலில்லா,திகழ்வாரைத்தாங்க னலந்தமிழ் வேதமிசைத்ததுவே' (399) என்றும்,

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"

என்பதைக்கருதி, 'நிலத்திற் கிடந்தமை கால்காட்டு மென்னு நிகழ்மொழிபோல்' (409) என்றும்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்பதை உட்கொண்டு,'சுருங்கிடையாள், அமையாகு மென்றோட் புலன்களைந்தானு மருந்தினம்'(37)என்றும்அமைத்துள்ள பகுதிகள் இவருக்குத் திருக்குறளின்பாலுள்ள அன்பை விளக்கும்.

இவர் தம் முன்னோராகியசிவப்பிரகாசசுவாமிகள்வாக்கிலிருந்து பலகருத்துக்களை இந்நூலில் எடுத்தாண்டிருக்கின்றார். 'கண்ணளத் தற்கரும் பேரொழி லாள்தனுக் காட்டிலனேற், பண்ணளக்கும் மொழி யாய்தூரிகையென்றும் பற்றிலனே' (105) என இவர் கூறுவது,

"எழுதா விடிற்புகழ் வேண்டிய யான்
கையா லெடுத்தது தூரிகை யேயல்ல காரிகையே"

என்னும் வெங்கைக் கோவைச் செய்யுளையும், 'இளங்கதி ரென்னவெழுமுது குன்றர்' (133) என்பது,

"உதயா திபனென நின்றார்தம் வெங்கையில்"

என்பதையும், 'உண்டுடுத்தீயார் பொருள்போன்ற தென்ற னுடவழகே, (215) என்பது,

"ஈயார் பொருளு மிறையாக் கிணறுமென
......நலமிழந் தேன்"

என்பதையும், 'கரத்திற் படுபிணிக் கின்கான் முடமெனக் கட்டுதல் போல்.......வெறியாட்டை மதித்தனனே' (230) என்பது,

"தலைமேற் படுமெறிக் கோர்கான் முடக்குந் தகைமையென்னக்
கொலைமேற் பயிலு மெமர்வெறி யாடல் குறித்தனரே"

என்பதையும், ‘நீலக் கருங்குழல் போலிருள் சேர்ந்து நிகழிரவில்’ (236) என்பது,

“கொன்காட்டி லுன்குழல் போலே யிருண்டவிக் கூரிருள்வாய்”

என்பதையும், ‘ஒருவர் சொல்லாது முக்காலமுமறி நெஞ்சத் தொடர்பினரே’ (356) என்பது,

“வெங்கையி லேசற் கடவுடர
முக்கா லமுமுணர்ந் தீர்”

என்பதையும் பின்பற்றி அமைந்திருத்தல் காண்க.

இந்திரன் பலமலைகளையும் சிறையரிந்தவனாயினும் இம்மலையைக் கண்டு அஞ்சுவானென்னும் பொருள்பட,

“புரந்தர னஞ்சு பழமலை வாணன்”

எனப் பழமலையந்தாதியில் அவர்கூறியதன் கருத்தை, பிறமலைகள் இந்திரன் தம் சிறைகளை யரிந்து விடுவானென அஞ்சினும் இம்மலை அஞ்சாதென்னும் பொருள்பட,

“இந்திரற் கஞ்சாத் திருமுதுகுன்றர்” (401)

என இந்நூலாசிரியர் வேறுருவத்தில் அமைத்திருக்கின்றார்.

## கஉ. சொற்களும் தொடர்களும்.

இவர் முல்லைப்பூவைக் கற்பின்றுணையெனுமோர் போது (12) என்றும், அக்கினியை வளியாக்குவோன் (94) என்றும், புகலில்லையென்னும் பொருள்பட, ‘திக்கில்லை’(247)என்றும், திரிதலென்னும் பொருள்பட ‘நடமாடுதல்’ என்றும் கூறுவர். மறிச்சு (223), சந்திச்சு (319), தெரிஞ்சு (305), நஞ்சு (நைந்து,) என்னுமுலகவழக்கு மொழிகளும்; இன்றிய (12, 87), சொற்பனம் (214), வெய்யில் (266), தளம் (தலம், 292), வாறு (339), அம்மனல் (அழகிய அனல், 361), தேயர் (தேசத்தினர், 397) முதலிய சிலவகைப் பிரயோகங்களும்; நங்குதல் (பழித்தல், 34),சனங்கள் (218, 353, 355), களை (களைப்பு, 219), வரி (புலி, 262), தூறு (இழிவு347), தொலை (நெடுந்தூரம், 348) முதலிய அரும்பதங்களும் இதில் வந்துள்ளன.

பின்னும், இதன்பால் தற்குறிப்பேற்றம்,சிலேடை, விரோதம் முதலியஅணிகளும் அகப்பொருளுக்குரிய இறைச்சி உள்ளுறை யுவமம் முதலியனவும் ஆங்காங்கே காணப்படும்.



இக்கோவையெழுதியுள்ள ஏட்டுப்பிரதி ஒன்று 40 வருஷங்களுக்குமுன்பு திருமழிசைச் *சிவப்பிரகாசையரென்பவரிட மிருந்து கிடைத்தது. அதன்பின்பு காஞ்சீபுரம் ஸ்ரீகங்காதர முதலியாரென்பவரிடமிருந்த வேறோர் ஏட்டுச்சுவடியைப் பார்த்துச்சிலபாட பேதங்கள் குறிக்கப்பட்டன.

முதலிற் கூறப்பட்ட ஏட்டுச்சுவடியின் முதலில்,

‘ஆழத்துப் பிள்ளையார் துணை. குருபாதந்துணை. துறைமங்கலம் கருணைச் சிவப்பிரகாசச் சுவாமியார் குமாரர் சுவாமிநாத சுவாமியா ரருளிச் செய்த பழமலைவாணர் கோவை ரத்தாட்சி௵ ஆவணிமீ கஅவஉ பூருவ பட்சம் சஷ்டியும் சோமவாரநாள் அனுஷநட்செத்திரமும் கூடினசுபதினம் தனுசுலக்கினத்தில், விருத்தாசலம் தெய்வ சிகாமணி அய்யர் பேரப்பிள்ளை சுவாமிநாத அய்யருக்குப் பழமலைக்கோவை எழுதத்துடங்கினது. சிவகடாட்சம்’

என்பனவும், இறுதியில்,

‘ஸ்ரீகுருவசவலிங்காயநம: சிவனேகதி, திருமூலதேவன்றிருவடிவாழ்க. சாலிவாகன சகாத்தம் ருகூஅஉ ௵இத்தினமேற் செல்லாநின்றவிக்கிரம௵ கும்பமீ ககஉ சுக்கிலபட்சம் சதுர்த்தெசியும் ஆயிலிய நட்செத்திரமும் கூடின...........பழமலையாரும் பெரியநாயகியம்மனும் மகாரத உச்சப சமையத்திற் பழமலையார் கோவை அரங்கேற்றி நிறைவேறினது. பழமலைநாதசுவாமியார் துணை. பெரியநாயகியம்மன் துணை. சிவகடாட்சம். தேவி சகாயம்’

என்பனவும் எழுதப்பட்டிருந்தன. இவற்றால் இந்நூலாசிரியர் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகளுடைய இளவலாகிய ஸ்ரீ கருணைப்பிரகாசருடைய பரம்பரையினராக இருக்கலாமென்று ஊகிக்கப் படுகிறது.

ஸ்ரீ விருத்தாசலேசர் திருவருளால் இப்பொழுது இக்கோவை குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று. இந்நூல் எளிய நடையில் அமைந்திருத்தலின் குறிப்புரை சுருக்கமாகவே எழுதப்பட்டது. இதனைத் தமது ‘சிவநேசன்’ பத்திரிகைவாயிலாக வெளியிடுவித்த அப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்களுடைய சிவநேசமும் தமிழன்பும் பாராட்டற்

* இவர் பிற்காலத்தில் திருப்பேரூர் மடத்தில் மடாதிபதியாக வீற்றிருந்தவர்.

பாலன; இவ்வாறு இவர்கள் செய்வித்தலானது, இதுவரை வெளிவராத வேறு நூல்களைப்பிரசுரித்தற்கு எனக்குப்பேரூக்கத்தை அளிக்கின்றது.

வழக்கம்போல இதனை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும் பொழுதும் உடனிருந்து தம்மால்இயன்ற உதவிகளை அப்பொழுதப் பொழுது புரிந்துவந்த அன்பர்களுக்கு ஸ்ரீ விருத்தாசலேசர் திருவருளால் எல்லாநலங்களும் அமைய வேண்டுமென்று அப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

(குறள் வெண்பா)

எண்ணலேய் நாற்பணியீ டேற விருத்தகிரி
அண்ணலே என்றும் அருள்.

| | |
|---|---|
| 'தியாகராஜ விலாஸம்'<br>திருவேட்டீசுவரன் பேட்டை<br>சென்னை. 14-1-35 | இங்ஙனம்,<br>வே. சாமிநாதையர், |

உ
கணபதி துணை.

# பழமலைக் கோவை.

இது

துறைமங்கலம்
சாமிநாதைய தேசிகரென்னும்
வீரசைவக் கவிஞரால் இயற்றப்பெற்றது.

சென்னை
மகாமகோபாத்தியாய—தாக்ஷிணாத்யகலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரால்
பரிசோதித்துத்
தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பலவான்குடி
'சிவநேசன்' அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

பவ௵ தைமீ
1935

விலை அணா 10.

186947

உ

# இப்புத்தகத்தி லடங்கியவை.

பக்கம்.


1. முகவுரை . 1—16

[கோவைகளின் இயல்பு; நூல்; பழமலையின் பெருமை: மணிமுத்தாநதி, மூர்த்திவிசேடம் முதலியன; நூலாசிரியர்; நூலாராய்ச்சி: மூர்த்தி, தலம், தீர்த்தம், வழிபட்டுப் பேறுபெற்றோர், பெரியோர் முதலியவர்கள் இயல்பு, பறவை தாவரங்களின் இயல்பு, உலக வழக்கச் செயல்கள், பழமொழிகளும் உலக வழக்குக்களும், உவமைகள், பழைய வரலாறுகள், ஒப்புமை, சொற்களும் தொடர்களும்.]

2. பழமலைக்கோவை மூலமும் குறிப்புரையும் ... 1—92

3. சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் ... 93

4. செய்யுட்களின் முதற் குறிப்பகராதி ... 94-100

## பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| முக. 2 | 27 | திருநடனத்துக்குக்குரிய | திருநடனத்துக்குரிய |
| ஷை 3 | 13,29 | முழம் கொலிநீர் | முழங்கொலிநீர் |
| 22 | 10 | வனலி...சோர் | வனலினிற்சோர் |
| 32 | 27 | சுந்தரமூர்த்தியை | சுந்தரமூர்த்தியை |
| 75 | 8 | ரலர்க்கென | ரலர்க்கென் |
| 87 | 17 | ஊனசேர | ஊன்சேர |
| 90 | 27 | பொருந்தி | பொருந்திக் |
| 92 | 17 | திகங்ண் | திங்கண் |



25. உடம்பி ரண்டு முயிர்ப்புட னுள்ளமும்
மடம்ப டும்மகங் காரமும் புந்தியும்
திடம்ப டத்தன்னில் வேறெனச் சிந்திப்பான்
உடம்பி லாஞான வுள்ளொளி யுள்ளுறும்.

(இ - ள்.) உடம்பு இரண்டும் - தூலவுடம்பு சூக்குமவுடம்பு என்னும் இரண்டும், உயிர்ப்புடன் உள்ளமும் - பிராணவாயுவும் மனமும், மடம்படும் அகங்காரமும் புந்தியும் - அறியாமையைச்செய்யும் அகங்காரமும் புத்தியும், தன்னில்வேறு என திடம்பட சிந்திப்பான் - ஆன்மாவாகிய தன்னில் நின்றும் வேறெனஉறுதியாக அறிந்தவனுக்கு, உடம்பிலாஞானஉள்ளொளி உள்உறும் - சிவஞானமாகிய உள்ளொளியானது ஆன்மாவாகிய தன்னிடத்தில் விளங்கித்தோன்றும் எ - று.

(பொ - ரை.) தூலவுடம்பு சூக்குமவுடம்பு என்னும் இரண்டும், பிராணவாயுவும், மனமும், அறியாமையைச்செய்யும்அகங்காரமும், புத்தியும் ஆன்மாவாகிய தன்னில் நின்றும் வேறென உறுதியாக அறிந்தவனுக்கு, சிவஞானமாகிய உள்ளொளியானது ஆன்மாவாகிய தன்னிடத்தில் விளங்கித்தோன்றும் எ - று.

(க -ரை.) உடம்பின்வேறாகத்தன்னைத் தெரிந்தவனுக்குச் சிவஞானம் விளங்கித்தோன்றும் என்பதாம்.

உடம்புஇரண்டு எனப்பொதுவாகக்கூறி, அவைஇவையென விளக்க வேண்டி, பிராணன் முதலியவற்றைச் சிறப்பாக எடுத்துக்காட்டினர். காட்டவே, பிராணன் தூலதேகத்தையும், உள்ளம் முதலியன சூக்கும தேகத்தையுங் குறித்தவாறும்.

பிராணவாயுவென்பது, சூக்குமசரீரத்தின் உறுப்புக்களுளொன்றாகிய வாயுபூதத்தின் காரியமாகும். இந்தப்பிராணவாயு தூலசரீரத்துக்குக் காவலாயுள்ளது. இது, உயிர்போல இயங்குந் தன்மையுடையதுபற்றி உபசாரமாய் உயிரெனவுங் கூறப்படும். இது, இயங்கும் போதுதான்நாடி முதலிய எல்லாத்தத்துவங்களும் இயங்கும். இது, இயங்கவில்லையாயின் ஒருதத்துவமுந் தொழிற்படாது. அம்மட்டோ உயிருந் தூலவுடலைவிட்டு நீங்கி விடும். ஆதலின், தூலவுடலைக் குறித்தற்குப் பிராணவாயுகூறப்பட்டது.

உயிர்த்தலைச்செய்யும் பிராணவாயு, உயிர்ப்பெனப்பட்டது.

உள்ளம் - மனம். இதன்றொழில் இதுவோஅதுவோ என ஐயுறுதல். இந்தஐயம், நிருவிகற்பமாய்க் கண்டதொரு பொருளிற்றான் நிகழுமாதலின், மனத்தைக்கூறவே, நிருவிகற்பமாய்க் (பிண்டமாய்) காணும் சித்தமுங் கூறப்பட்டதாயிற்று.

அகங்காரம் - இது, இன்னதாமென நிச்சயிப்பேன் என்னுந் தொழிலினையுடையது. யானல்லாத வுடம்பையானென்றும், எனதல்லாத பொருள்களை எனதென்றும், அபிமானிக்கச் செய்வதும் இதுவேயாதலின் மடம்படும் அகங்காரமென விசேடணங்கொடுத்துக் கூறப்பட்டது.

புத்தி - இது, இன்னதென நிச்சியிக்குந் தொழிலினையுடையது. அநுபவிக்கப்படும் பொருள்களனைத்தும் நிச்சயத்தோடு கூடியிருக்குமாதலின் புத்திபோக்கியமெனவும் படும். * "புத்தியவ் வியத்திற்றோன்றிப் புண்ணிய பாவஞ்சார்ந்து, வத்துநிச்சயமும் பண்ணி வருஞ்சுக துக்கமோகப், பித்தினின் மயங்கிஞானக்கிரியையும் பேணிநிற்கும்" என்பதனால் புத்திபோக்கியமென்பது பெறப்படுமாறு காண்க.

தோற்றமுறைபற்றி, புத்தி அகங்காரம் மனமெனக் கூறவேண்டுமாயினும், ஒடுக்கமுறைபற்றி மனம் அகங்காரம் புத்தியெனக்கூறினார்.

அந்தக்கரணம் நான்குங் கூறவே, சூக்குமசரீர தத்துவங்களனைத்துங் கொள்ளப்படும்.

தன்னில் என்பது தனில் என இடைக்குறைந்தது.

சிந்திப்பான் என்பது வினையாலணையும் பெயர். அவ்விடத்து நான்கனுருபுதொக்கு நின்றது. சிந்தித்தல் - அறிதல். யானென்னும் உணர்ச்சிக்குரியபொருள் யாதென அவ்வுணர்ச்சியை உற்றுநோக்குதலே உடம்பை வேறென அறிதல்.

உயிர் யாதானுமொன்றைப் பற்றி நிற்குமன்றித் தனித்துநில்லாது. உடம்பின்பற்று நீங்கினவிடத்துச் சிவனைப்பற்றி நிற்கும். அப்பொழுது நிகழும் சிவஞானத்தை உடம்பிலா ஞானமென்றார். அந்தஞானம், தன்னிடத்துப் பிரிப்பின்றிநிற்கும் சிவனை விளக்குதலின், உள்ளொளியெனப்பட்டது. புறவொளி - புறப்பொருளை விளக்கும் சூரியனொளிமுதலாயின.

உறுதல் - விளங்கித்தோன்றுதல். (உரு)

(அ - கை.) சாதனஞ் செய்யுங்காலத்து நிகழுந்தடைகளை, தயிரியத்துடன் நீக்கிச் சாதனத்தில் உறைத்துநிற்கவேண்டுமெனக் கூறுகின்றார்.

26. திருத்தகு சமாதியைச் செய்யுங் காலத்துக்
கருத்தெழுந் தடங்காது கலங்கு மாயினும்
வருத்தமா நித்திரை மருவு மாயினும்
திரித்தறி வுறுத்துத்தன் னிலையிற் சேர்க்கவே.

(இ - ள்.) திருத்தகு சமாதியை செய்யுங்காலத்து - சிறப்புவாய்ந்த சமாதியை அநுட்டிக்கும்பொழுது, கருத்து அடங்காது எழுந்து கலங்கும்

* சிவஞானசித்தியார். உ-ம் சூ-ம். செ. ருஅ.



ஆயினும் - மனமானது (பழையவாசனையால்) அடங்காது விடயங்களிற் சென்று கலக்கத்தை அடையுமாயினும், வருத்தம் ஆம் நித்திரைமருவும் ஆயினும் - சாதிக்கும் வருத்தத்தாலுளதாகும் நித்திரைவந்து பொருந்துமாயினும், திரித்து - அவற்றிற்செல்லவொட்டாது மனத்தைத் தடுத்து, அறிவுறுத்து - அவற்றால் உண்டாகுங்கேட்டை(அம்மனத்திற்கு)அறிவித்து, தன் நிலையில் சேர்க்க - சிவனோடு பிரிப்பின்றிநிற்கும் தனது உண்மைநிலையில் அம்மனத்தைச் சேர்க்கவேண்டும் எ - று.

(பொ - ரை.) சிறப்புவாய்ந்த சமாதியை அநுட்டிக்கும் பொழுது, மனமானது பழையவாசனையால் அடங்காது விடயங்களிற்சென்று கலக்கத்தை அடையுமாயினும், சாதிக்கும்வருத்தத்தால் உளதாகும் நித்திரைவந்து பொருந்துமாயினும், அவற்றிற் செல்லவொட்டாது மனத்தைத் தடுத்து, அவற்றாலுண்டாகுங் கேட்டை அம்மனத்திற்கு அறிவித்து, சிவனோடு பிரிப்பின்றி நிற்குந்தனது உண்மைநிலையில் அம்மனத்தைச் சேர்க்கவேண்டும் எ - று.

(க - ரை.) சமாதியை அநுட்டிக்குங் காலத்து, மனம் சலனமடையினும் நித்திரைவரினும் அவற்றைத்தடுத்து, சமாதியில் உறைத்து நிற்கவேண்டும் என்பதாம்.

ஈற்றிலுள்ள ஏகாரம் அசை.

சமாதி - ஆன்மாவாகியதான் சிவனையின்றித் தனித்து நில்லாமையை அறிந்து சிவமாய் நிற்கும் நிட்டை. இந்நிலையை அடைதலும், கன்மவசத்தால் அந்நிலையினின்று நழுவி தேகந்தானாதலும், மீண்டும் அந் நிலையை அடைதலுமாயுள்ள நிலை சாதனம். இடைவிடாது அந்நிலையில் நிற்றல் சாத்தியம். சாத்தியம் அநுபவம் என்பன ஒரு பொருட்சொற்கள். வேம்பு தின்ற புழு, அதனைவிட்டுக் கரும்புக்கொல்லையை அடைந்து அதன்சுவையை அநுபவிக்கினும், பழையவாசனைபற்றி வேம்பையே நோக்குமாறுபோல, சாதனகாலத்தில் சிவம் விளங்கித் தோன்றினும் அதனைவிட்டுப் பழைய வாசனைபற்றி விடயங்களைப்பற்றும். அங்ஙனம் பற்றவருங்கால் விடயங்களாலுண்டாந் துன்பத்தை நினைந்து அவற்றில்நின்றும் நீங்கிச் சாதனத்தில் உறைத்து நிற்கவேண்டும்.

சாதனஞ்செய்வோர் நித்திரைசெய்தல்கூடாதென்பது இச்செய்யுளின் கருத்தன்று. நித்திரைக்கெனக் குறித்தகாலத்தும், நித்திரைசெய்யாமல் சரீரவருத்தந் தீராதகாலத்தும் நித்திரை செய்தல் இன்றியமையாதது. நித்திரை செய்ய வேண்டாத காலத்திற்றான் சாதனஞ் செய்யவேண்டும். அப்பொழுது நித்திரை வருமாயின், அது சரீர வருத்தத்தால் வந்ததன்று; தமோகுணமிகுதிப்பாட்டால் வந்ததென்று அறிந்து அதனைநீக்கவேண்டும் என்பதே இச்செய்யுளின் கருத்தாம்.

வருத்தம் என்றவிடத்து அத்துச் சாரியையும் ஆலுருபுந் தொக்குநின்றன. (உசு)

(அ-கை.) சாதனத்தில் உறைத்து அடங்கிய மனத்தை மீண்டும் விடயங்களில் திரும்பாத வண்ணங்காக்க வேண்டுமெனக் கூறுகின்றார்.

27. ஆராதசித்தம் யாதோர் காலத்தி னடங்கு மானால்
போமல் வருந்திக்காத்துப் பின்னைச்சிந் தனைகள்சென்று
சாராமல் வல்லவாறு தடுத்துச்சார் வானவெல்லாம்
சேராமல் மயக்கநீக்கித் திதமாகச் செய்துகொள்வான்.

(இ-ள்.) ஆராத சித்தம் யாது ஓர்காலத்தில் அடங்கும் ஆனால் - பெற்றதுகொண்டு நிறைதலை யடையாதமனம் யாதானுமோர் காலத்தில் சலனமின்றி அடங்குமாயின், போமல் வருந்திக்காத்து - அவ்வடக்கத்தினின்றும் பிறழாதவாறுவருந்திக் காத்து, சிந்தனைகள் பின்னை சென்று சாராமல் வல்ல ஆறுதடுத்து - (பிறழ்ச்சிக்குக்காரணமான)விடயவாசனைகள் மீண்டும் வந்துபொருந்தாமைக்கு ஏற்றவழியால் அவ்வாசனைகளைத்தடுத்து, சார்வு ஆன எல்லாம் சேராமல் மயக்கம் நீக்கி - (வாசனைக்குக் காரணமாய்) பற்றுக்கோடாயுள்ளன அனைத்தும் மனத்தைப் பொருந்தாதவாறு (பொருந்துதற்குக் காரணமான) அறியாமையை நீக்கி, திதமாக செய்துகொள்வான் - நிலைபெறுமாறு செய்து கொள்ளக்கடவன் எ-று.

(பொ-ரை.) பெற்றதுகொண்டு நிறைதலையடையாத மனம் யாதானுமோர் காலத்தில் சலனமின்றி அடங்குமாயின், அவ்வடக்கத்தினின்றும் பிறழாதவாறு வருந்திக்காத்து, (பிறழ்ச்சிக்குக்காரணமான) விடயவாசனைகள் மீண்டும் வந்து பொருந்தாமைக்கு ஏற்ற வழியால் அவ்வாசனைகளைத் தடுத்து, (வாசனைக்குகாரணமாய்) பற்றுக் கோடாயுள்ளன அனைத்தும் மனத்தைப் பொருந்தாதவாறு, (பொருந்துதற்குக் காரணமான) அறியாமையைநீக்கி, நிலைபெறுமாறு செய்துகொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) சாதனத்தால் அடங்கியமனம் வாசனையால் விடயங்களில் மீளுமாயின், மீளாமைக்கேற்றவழியால் வாசனைகளைக் கெடுக்கவேண்டும் என்பதாம்.

செய்துகொள்வான் என்னும் பயனிலைக்கு சீவன் முத்தன்என்னும் எழுவாய் வருவித்துரைத்துக்கொள்க. இங்கேகூறப்பட்ட செயல்களனைத்தும் சீவன் முத்தனுக்கு இலக்கணமாதலின், செய்துகொள்க வெனவிதியாகக்கூறாது செய்துகொள்வானென இலக்கணமாகக்கூறினார்.

ஆர்தல் - நிறைதல்.

யாதோர்கால மென்பது சாதனகாலம். காத்தலின் அருமைதோன்ற வருந்திக்காத்து என்றார்.

சிந்தனையென்பது சிந்திக்கப்படும் வாசனையைக் குறித்தது.



வல்லஆறு - ஏற்றவழி. அது, திருவைந் தெழுத்தை விதிப்படி கணித்தல். சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் கூ-ம் சூத்திரத்து ங-ம் அதிகரணத்தில் இதனை விரித்துக் கூறியிருக்கின்றாமாதலின் விரிவை அவ்விடத்திற்காண்க.

பிறழ்ச்சிக்குக் காரணம் வாசனையும், வாசனைக்குக் காரணம் பொருள்களினிடத்து வைத்துள்ளபற்றும், பற்றுக்குக் காரணம் அறியாமையுமாதலின், சிந்தனைகள் சென்று சாராமல் தடுத்து சார்வானவெல்லாம் சேராமல் மயக்கம் நீக்கி யெனமுறைப்பட வைத்தார் † "சார்புணர்ந்து சார்புகெடவொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரும் நோய்." என்னுந் திருவாக்கும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

மயக்கம் - பொருளின் நிலையாமையை அறியாமை.

திதம் - நிலைபெறுதல். மனம்நிலைபெறுதற்கு திருவைந்தெழுத்தை விதிப்படி கணித்தலேயன்றிச் சிவாலயவழிபாடும் ஏற்றவழியாகும். இதனை, ¶"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப், புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலைபுனைந் தேத்திப் புகழ்ந்துபாடித், தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடி சங்கராசய போற்றி போற்றியென்றும், அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்றே அலறாநில்லே." என்னும்திருவாக்கானுணர்க. (உஎ)

(அ-கை) மேற்கூறியவாறு மனத்தை நிலைபெறச்செய்து காப்பவரே நற்றவரெனக்கூறுகின்றார்.

28. பற்றினாற் சலிக்குமுள்ளம் பற்றாதே பண்ணிக்கொள்க
நிற்றலின் றெனினுந்தந்த நிலையினி னிறுத்திக்கொண்டால்
பெற்றன மென்றுபேணிப் பின்னைப் போமற்காக்கும்
நற்றவ ரன்றியிந்த வுலகினி னல்லோரியாரே.

(இ-ள்) பற்றினால் சலிக்கும் உள்ளம் - பொருள்களினிடத்து வைத்திருக்கும் பற்றினால் (சாதனத்தில் நின்றும் நழுவி) சலனத்தையடையும் மனம், பற்றாதேபண்ணிக்கொள்க - பொருள்களைப் பற்றாதவாறு செய்துகொள்க, நிற்றல் இன்று எனினும் - பற்றாது நிலைபெறவில்லையாயினும், தம்தம்நிலையினில் நிறுத்திக்கொண்டால் - தாம்தாம் அநுட்டிக்கும் சாதனத்தினிடத்து (மீண்டும்) மனத்தைச் செலுத்தி நிலைபெறச்செய்துகொள்க; அங்ஙனஞ் செய்துகொண்டால், பெற்றனம் என்றுபேணி - பெறுதற்கரிய இப்பேறைப்பெற்றோம் என்றுகருதி ஆதரவுடன், பின்னைபோமல்காக்கும் நற்றவர் அன்றி இந்த உலகினில் நல்லோர்யாரே - மீண்டும் நழுவாமல்

† திருக்குறள். மெய்யுணர்தல், செ, கூ.
¶ திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

காப்பவரே நல்ல தவத்தையுடையவர்; அவரையின்றி இவ்வுலகத்தில் நன்மையுடையார்யாவர். ஒருவருமில்லை எ - று.

(பொ - ரை) பொருள்களினிடத்து வைத்திருக்கும் பற்றினால் (சாதனத்தில் நின்றும் நழுவி) சலனத்தையடையும் மனம், பொருள்களைப் பற்றாதவாறு செய்துகொள்க. பற்றாதுநிலைபெறவில்லையாயினும், தாம் தாம் அநுட்டிக்கும் சாதனத்தினிடத்து (மீண்டும்) மனத்தைச்செலுத்தி நிலைபெறச்செய்துகொள்க. அங்ஙனஞ் செய்துகொண்டால், பெறுதற்கரிய இப்பேற்றைப் பெற்றோமென்றுகருதி, ஆதரவுடன் மீண்டும் நழுவாமல் காப்பவரே நல்லதவத்தையுடையவர். அவரையின்றி இவ்வுலகத்தில் நன்மையுடையார்யாவர். ஒருவருமில்லை எ - று.

(க - ரை) பொருட்பற்றை நீக்குதலாலேனும், சாதனத்தில் உறைத்து நிற்றலாலேனும், மனத்தைச் சலனமின்றி நிலைபெறச் செய்துகொள்பவரே நற்றவர் என்பதாம்.

நிற்றல் இன்று எனினும் என்றவிடத்து, உம்மை நிற்றல்வேண்டும் என்னுங்கருத்தால் வந்த எதிர்மறை.

தத்தம் நிலை - தாம்தாம் அநுட்டிக்கும் சாதனம். செலுத்தியென்பது வருவித்துரைத்துக் கொள்க. பொருட்பற்று நீங்குதற்குச் சாதனத்தைப் பற்றவேண்டுமென்பது. * "அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு" என்பதனானு மறியப்படும்.

காக்கும் நற்றவரன்றியென்னும் அநுவாதத்தால் காப்பவர்நற்றவரென்பது பெறப்பட்டது.

தவம், தத்தம் பலனைத்தந்து அழியுந் தவமென்றும், பலனைத்தந்து அழியாது மேற்றவத்திற் செலுத்துந் தவமென்றும் இரு வகைப்படும். அவற்றுள், முன்னையது வேதத்திற் கூறப்படும் வேள்விமுதலியன. பின்னையது ஆகமத்திற் கூறப்படும் சரியைமுதலியன. நன்மையெனப்படுவன எல்லாவற்றினும் சிறந்தது வீடுபேறு. அதனையடையச் செய்வது ஞானம். ஆதலின், ஞானத்தையுடையவரே இவ்விடத்துக்கூறப்பட்ட நற்றவராவர். இது, மேல் உ-வது செய்யுளுரையிலுங்கூறப்பட்டிருத்தல் காண்க. யாரே என்றவிடத்து ஏகாரம் அசை. (௨௮)

(அ - கை.) சிவனோடு பிரிப்பின்றி நிற்குந் தன்னையறிதலே மக்கட் பிறவியாலாய பயனைக் கூறுகின்றார்.

29. பிறந்து பெற்றவறிவாற் பெறும் பயன்
நிறைந்த நீர்முகி னீங்கிய வானென

* திருக்குறள் துறவு. செ. ௧௦.



அறிந்து தன்னை யமல வியாபகம்
செறிந்து நல்லதி யானத் திருத்தலே.

(இ - ள்.) பிறந்து பெற்ற அறிவால் பெறும் பயன் - (மக்களாய்ப்) பிறந்தமையால் பெற்ற பகுத்தறிவால் பெறத்தகும் பயனாவது, அமலவியாபகம் செறிந்துதன்னை - நின்மலமான(சிதாகாசத்தால்) வியாபிக்கப்பட்டதன் உண்மையை, நிறைந்த நீர்முகில் நீங்கியவான் என அறிந்து - நிறைந்தநீரோடுங்கூடிய மேகம் நீங்கிய ஆகாயத்தைப்போல (மலமற்றஞானவெளியாக) அறிந்து, நல்லதியானத்து இருத்தலே - (அங்ஙனம் அறிந்ததனைமறவாத) நல்லதியானத்தில் நிலைபெற்றிருத்தலேயாம் எ - று.

(பொ - ரை.) (மக்களாய்ப்) பிறந்தமையால் பெற்ற பகுத்தறிவால் பெறத்தகும் பயனாவது, நின்மலமான சிதாகாசத்தால்வியாபிக்கப்பட்டதன் உண்மையை, நிறைந்த நீரோடுங்கூடிய மேகம்நீங்கிய ஆகாயத்தைப்போல (மலமற்றஞானவெளியாக) அறிந்து, (அங்ஙனம்அறிந்ததனைமறவாத) நல்லதியானத்தில் நிலைபெற்றிருத்தலேயாம் எ - று.

(க - ரை.) சிவனால்வியாபிக்கப்பட்ட தன்னைச், சிவனைப்போல் மலமற்ற ஞானவெளியாக அறிதலே மக்கட்பிறப்பினாலாயபயன் என்பதாம்.

பெற்றஅறிவால் என்றதனால் மக்களென்பது வருவிக்கப்பட்டது. பெற்றஅறிவு - கல்வியாற்பெற்றபகுத்தறிவு. கல்வியறிவாகியசெயற்கையறிவு மண்ணுலகத்தில் மக்கட்பிறவிக்கு மாத்திரந்தான் உள்ளது. கல்வியறிவால் இதுசெய்யத்தக்கது, இது செய்யத்தகாததுஎன்னும் பகுத்தறிவு உண்டாம். விலங்குமுதலிய ஏனைய பிறவிகட்கு அந்த அந்தப் பிறவிக்கேற்றவாறு அருந்தல் பொருந்தல் முதலியவற்றிற்குரிய இயற்கையறிவே யன்றிக் கல்வியறிவாகிய செயற்கையறிவும் அதனாலுண்டாம் பகுத்தறிவுங்கிடையா.

பிறந்துபெற்ற என்பது பிறந்தமையால் பெற்ற என்னும் பொருள் குறித்தது; மழைபெய்து குளம் நிறைந்தது என்றாற்போல.

நீர்முகில் நீங்கியவான் என்னும் உவமையால் மலமற்ற ஞானவெளியென்பது பெறப்பட்டது.

அமலவியாபகம் - சிதாகாசசொரூபமாகிய சிவம். சீவனுக்கும் வியாபிக்குந்தன்மை உண்டெனினும் மலத்தோடுகூடிய வியாபகமாதலின், அது, ஏகதேசவியாபகமெனப்படும். அதாவது, யாதானுமொன்றை மாத்திரம் வியாபிப்பது. இயல்பாகவே மலமில்லாதசிவனுடையவியாபகம் பூரணவியாபகமெனப்படும். அதாவது, எல்லாப் பொருள்களையும் எக்காலத்தும் வியாபிப்பது. எனவே, பெத்தநிலையினும் சீவன், சிவனால் வியாபிக்கப்பட்டிருக்குமென்பது பெறப்பட்டது. ஆயினும், மலமறைப்பால் அதுவிளங்காதாயிற்று. சாதனத்தால் மலம் நீங்கினபொழுது சிவனால் வியாபிக்கப்

பட்டிருத்தல் விளங்கித்தோன்றும். சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடைய சீவன், அப்பொழுது சிவம்போலமலமற்றஞானவெளியாகத் தோன்றும். இக்கருத்துணர்த்துதற்கு அமலவியாபகஞ்செறிந்து தன்னைநீர்முகில் நீங்கியவானெனை அறிந்து என்றார்.

செறிந்த என்பது செறிந்துஎனத்திரிந்தது. செறிதல் - வியாபித்தல்.

இவ்வாறு தன்னையறிந்தவன், மீளமறத்தலின்றித் தன்னையேஅறிந்துகொண்டிருத்தல் முறைமையென்பதறிவித்தற்குப் பயன்மேல் வைத்துக் கூறினர்.

துன்பத்துக்கும் நிலைபேறில்லாத இன்பத்துக்கும் ஏதுவான பொருள்களைத் தியானிக்கும் தியானம்போலன்றி, இது, என்றும் நிலைபேறுடைய இன்பத்திற்கு ஏதுவானசிவத்தியானமாதலின் நல்லதியானமெனப்பட்டது. ()

(அ - கை.) இருதயமுதலிய தானங்களைப்பற்றி நிற்கும் பற்றுக்களை விட்டுச் சிவனைப்பற்றி நிற்பவனே சிவயோகியாவனெனக் கூறுகின்றார்.

30. வளியென மறுகுஞ்சித்த நெஞ்சிலே மருவிநிற்கும்
தெளிவுற நடுவுகீழ்மேற் செலாவகை நிறுத்திக்கொண்டால்
ஒளியுறு முள்ளமொன்றும் பாவியா துறவே நோக்கி
எளியவப் பொருண்மேற் பற்றற்றிருப்பவன் யோகியாவான்.

(இ - ள்.) வளியெனமறுகும் சித்தம் - காற்றைப் போலச் சுழலும் மனத்தை, நடுவுகீழ்மேல் செலாவகை நிறுத்தி கொண்டால் - இருதயம் மூலாதாரம்பிரமரந்திரமாகிய தானங்களில்செல்லாதவாறு (தன்னிடத்தில்) நிலைபெறச் செய்துகொள்ளின், நெஞ்சில் மருவிநிற்கும் ஒளிதெளிவு உறஉறும் - அம்மனத்தினுள்ளே பொருந்தியிருக்கும் ஒளிரூபமான சிவம்விளங்கித்தோன்றும், ஒன்றும் பாவியாது உறவே நோக்கி - (அங்ஙனம்தோன்றிய பின்னர்) வேறொன்றையும் சிந்தியாது அந்தச் சிவத்துடன் கலத்தலையே சிந்தித்து, எளிய அப்பொருள்மேல் பற்று அற்று இருப்பவன் யோகியாவான் - (அச்சிந்தனையின் முதிர்ச்சியால்) தனிமையான அந்தச்சிவப்பொருளினிடத்துள்ள பற்றும் அற்றுச் சிவமாயிருப்பவனே சிவயோகியாவன் எ - று.

(பொ - ரை.) காற்றைப்போலச் சுழலும் மனத்தை, இருதயம் மூலாதாரம் பிரமரந்திரமாகிய தானங்களில் செல்லாதவாறு தன்னிடத்தில் நிலைபெறச் செய்துகொள்ளின், அம்மனத்தினுள்ளே பொருந்தியிருக்கும் ஒளிரூபமான சிவம் விளங்கித் தோன்றும். அங்ஙனந் தோன்றிய பின்னர் வேறொன்றையுஞ் சிந்தியாது அந்தச்சிவத்துடன் கலத்தலையே சிந்தித்து, அச்சிந்தனையின் முதிர்ச்சியால் தனிமையான அந்தச் சிவப்பொருளினிடத்துள்ள பற்றும் அற்றுச் [illegible]யிருப்பவனே சிவயோகியாவன் எ - று.

186947

# செய்தித்திரட்டு.

மகிழ்ச்சி:— கொரடாச்சேரி உயர்திரு சச்சிதானந்த சுவாமிகள் மாணவர் சைவத்திரு P. S. சுப்பிரமணிய உடையார் அவர்கள் சைவசித்தாந்த மகாசமாஜத்தினரால் முதலாவதாக இளஞ்சைவப்புலவர் பட்டமும் பொற்பதக்கமும், சித்தாந்த நூல்களும் பரிசிலாகப்பெற்று திருக்கோவலூர் ஞானியார்மடாலயத்தலைவர் உயர்திரு சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் நன்குமதித்துப் பூரண ஆசீர்வாதம் செய்யப்பெற்று பல தலங்களுக்குச் சென்று, சிவதரிசனப் பேறும்பெற்று வந்தமைக்கு வலங்கைமான் ஆண்டான்கோயில் தெய்வீக மலையமன்னர் சங்கத் தலைவர் திரு. பகவான்தாஸ் உடையார் தமக்குள்ள மகிழ்ச்சியை தெரிவிக்கிறார்.

தேவகோட்டை:—இவ்வூருக்கு காஞ்சிபுரம் ஸ்ரீ உ. வே. ஜெகத்குரு. பிரதிவாதி பயங்கரம் மடாதிபதி ஸ்ரீ அனந்தாசார்ய ஸ்வாமிகள் மார்கழி ௬உ விஜயஞ்செய்தனர். மாலை 4-30க்கு காட்டுத் தண்ணீர்பந்தலிலிருந்து மகாஜனங்களால் வரவேற்பும் கோர்டுக்கு எதிரில் நகரத்தார் ஹைஸ்கூல் [illegible]ஞ்சுக் கொட்டகையில் பிரசங்கங்களும் நடைபெற்றன.

வெற்றியூர்:—சிவநேசச் செல்வர், ராம. மு. ராம. (ஈரோடு) முத்தையசெட்டியார் கார்த்திகை ௬௰௨ தமது எழுபத்தாறும் ஆண்டில் ஸ்ரீ சுவர்னகாளீஸ்வரப் பெருமான் திருவடி சேர்ந்தார். அவர்களின் பிரிவுக்கு நமது அனுதாபத்தை அவர்கள் மகன் திரு. இராமசாமி செட்டியாருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு:—திருவாரூர் மகாநாட்டில் முடிவுசெய்தபடி 'தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டை' வடாற்காடு ஜில்லாவின்சார்பாக திருவத்திபுரத்தில் 1935 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 26, 27 தேதிகளாய பவஷு தைத்திங்கள் ௧௩, ௧௪ சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வரவேற்புக்கழகம் அமைப்பதற்தாக 3-12-34ந் தேதி பரிதிபுரம் பக்ஷீஸ்வார் ஆலயத்தில் திரு. க. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடியகூட்டத்தில் ஜில்லாபோர்டு அங்கத்தினர் திரு. மா. லோகநாத முதலியார் சமூகமகாநாட்டிற்கும், குடியேற்றம் முனிசிபல் சேர்மன் திரு. M. V. பீமராஜ முதலியார் வர்த்தகர் மகாநாட்டிற்கும், தக்கோலம் மிராசுதார் திரு. A. R. செல்லப்பா முதலியார் வாலிபர் மகாநாட்டிற்கும் வரவேற்புக்கழகத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்துடன் இன்னும் பல உபகமிட்டிகளும் அமைக்கப்பட்டு மகாநாட்டு வேலைகள் வெகுதீவிரமாக நடைபெற்றுவருகின்றன. தென்னிந்தியா முழுவதிலுமுள்ள செங்குந்தர்களனைவரும் திரண்டு வருவார்களென எதிர்பார்ப்பதாக விளம்பர சபை அங்கத்தினர் திருவத்திபுரம் திரு. அ. தம்பிரான் முதலியார் தெரிவிக்கின்றனர்.

கோடம்பாக்கம்:—சென்னைக்கு அணித்தாய் வடபழநி எனவழங்கும் இத்திருத்தலத்தில் தண்டாயுதபாணியாகிய பழநியாண்டவர் ஆலயத் திருப்பணி செவ்விதிற் செய்து நிறைவேறியதாகவும் இம்மதி 26உ (8-2-1935) வெள்ளிக்கிழமைகாலை நாழிகை ௧௰-க்குமேல் மூன்றேமுக்காலுக்குள் கும்பலக்ன நன்முகூர்த்தத்தில் மகாகும்பாபிடேகம் நடைபெறும் எனவும் ஷை ஆலயதர்மகர்த்தர் உயர்திரு. பாக்கியலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பத்திரிகை பரப்பியுள்ளார்கள்.

குருபூஜை:-சிதம்பரத்தில் யாழ்ப்பாணம் வண்ணைநகர் உயர்திரு சுவாமிநாத பண்டிதரவர்களின் முதலாவது குருபூசை, அவர்களின் மடத்தில் மார்கழி ௧௨-வ பூரநக்ஷத்திரமும் சஷ்டி திதியுங் கூடின தினத்தில் நடைபெற்றது.

திருக்கோயிலில் மூர்த்திகளுக்கு திருமஞ்சன திருவாராதனை நிவேதனங்கள் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

சிவநேசச்செல்வர்களும் செந்தமிழ்க்கலை தேர்ந்த பல வித்துவான்களும் பண்டிதரவர்களின் பலமாணவர்களும் வந்திருந்தார்கள்.

தேவாரபாடசாலையிலும் மெய்கண்ட வித்தியாசாலையிலும் மாகேசுவர பூஜையும் தமிழ் மறைவாணர்கள் சிவபூஜகர்களுக்குத் திருவமுதும் அறுபத்துமூவர் திருமடத்தில் வைபரதேசிகட்குத் திருவமுதும் செய்யப்பெற்றன. தமிழ் மறைவாணர்கள் தேவாராதி திருப்பாசுரங்களையோதினர். அவர்கட்கு தக்ஷிணை வழங்கப்பெற்றது.

பிற்பகல் தில்லைவாழந்தணரும் பிரசங்கரத்னகரப்பெயரியருமான திரு. சிவாகமசுந்தர தீக்ஷிதரவர்கள் தலைமையில் அகரம் சிவஸ்ரீ அமிர்தேசுவர சிவாசாரியார் அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் திரு. சர்க்கரை இராமசாமிப் புலவர், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் திரு. தருமலிங்கம் பிள்ளை ஷை கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும் பண்டிதரவர்களின் மாணவருமான திரு. சிவப்பிரகாச தேசிகர், சென்னை திரு. சமரபுரி முதலியார் விருத்தாசலம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், திரு. பெரியசாமி பிள்ளை ஆகியவர்கள் பண்டிதரவர்களின் சைவாசாரசீலங்களையும் அவர்கள் சைவ உலகிற்கு ஆற்றிய நற்செயல்களையும் சைவநூல்கள் அச்சிடுவித்து உபகரித்தவைகளையும் உயர்திரு ஆறுமுகநாவலரவர்கள் சைவநூல்களை அச்சியற்றியும் பிரசங்கங்கள்புரிந்தும் வித்தியாசாலை நிறுவியும் சைவசமய பரிபாலனஞ் செய்தாங்கு, அவர்கட்குப் பிற்காலம் பண்டிதரவர்கள் சைவநூல்களை அச்சுவாகனமேற்றுவித்தும் பிரசங்கங்கள் புரிந்தும் திருச்செந்தூரில் வித்தியாசாலை நிறுவியும் சைபரிபாலனம் செய்தார்கள் என்பதையும் மிகப் பாராட்டிப் புகழ்ந்து பேசினர். தலைவர் முன்னுரை முடிப்புரைகளை விளக்கமாகக் கூறினர். புழலை பண்டிதரத்னம் குகஸ்ரீ திருநாவுக்கரசு முதலியார் பாடியனுப்பிய "பண்டிதராற்றுப்படை" மெய்க்கீர்த்திமாலையில் சில கண்ணிகளும் செய்யுட்களும் தருமலிங்கம் பிள்ளையால் படிக்கப்பெற்றன.

பண்டிதரவர்களின் மாணாக்கர் அமராவதிபுதூர் சிவநேசச்செல்வர் வயி. நாக. ராம. அ. வேங்கடாசலம் செட்டியார் பண்டிதரவர்களைப் பாராட்டியும் திருச்செந்தூரில் அவர்கள் நிறுவியுள்ள வித்தியாசாலை நன்குநடைபெறவும் சிதம்பரத்திலுள்ள அவர்களின் மடாலயத்தைப் பழுது பார்த்து அவர்கள் சேகரித்து வைத்துள்ள புத்தகங்களை வகையாகத் தொகுத்து அவர்கள் புகழ் நிலவும்படி புத்தகசாலை வைக்க, சைவப்பெருமக்களும் தமிழ்ப்பெருமக்களும் தனவைசியப் பிரமுகர்களும் பிறதக்காரும் தகுந்த உதவிபுரியவும் இக்குரு பூசைக்கு உபகரித்த சிவநேசச் செல்வர்கள் பலர்க்கும் நடராஜவள்ளலார் மேலும் நலம் பல அருளவும் வேண்டுமெனக் கூறினர். வந்தன வாழ்த்துடன் நிறைவேறியது.

### "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

உள்நாட்டிற்கு ரூ 2--4--0 அதற்கு மூலதனம் ரூ 30--0--0

அயல்நாட்டிற்கு ரூ 3--0--0 அதற்கு மூலதனம் ரூ 40--0--0

தனிப்பிரதி அணா 0--3--0

### விளம்பரவிகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4--0--0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8--0--0

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர் ராம. கு.ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.